மேழிச்செல்வம்

MADRAS RECORD OFFICE
8 - DEC 1964
R. R. No. 290



தீவிர
உற்பத்தி
பகுதி
திட்டம்







குரோதி

சோபகிருது ௵ ஆடி ௴

கோதுமைக்கு பிளாஸ்டிக் 'காற்றுக் கிடங்கு'

(பிரிடிஷ் இன்பர்மேஷன் சர்வீசஸ்)

பலூன் உருவத்தில் பிரிட்டனில் தயாரிக்கப்பட்ட பிளாஸ்டிக் பத்தாயம் ஒன்றை புது தில்லியில் நிறுவியிருக்கிறார்கள். வெப்ப மண்டல நிலைமையைச் சமாளிக்கக் கூடியதுதானா என்று சோதித்துப் பார்ப்பதற்காக இந்தியாவுக்கு இது அனுப்பப்பட்டது.

"காற்றுக் கிடங்கு" என்று அழைக்கப்படும் இது 500 டன் தானியம் கொள்ளக் கூடியது. ஆகஸ்டு 14-ம் தேதி இந்த கிடங்கில் கோதுமை நிரப்பப் பெற்றது. பிரிட்டனில் தொழில் நுட்பக் கூட்டுறவு துறையின் நிதி உதவி பெறும் ஆராய்ச்சி ஸ்தாபனங்களில் ஒன்றான "டிராபிக்கல் ஸ்டோர்டு பிராடக்ட்ஸ் சென்டர்" என்ற நிறுவனம், தயாரிப்பாளர்களுடன் சேர்ந்து இரண்டாண்டு காலம் பரிசோதனை செய்ததன் பயனாக இந்தக் "காற்றுக் கிடங்கு" உபயோகத்திற்கு வந்தது.

விவசாயப் பொருள்களுக்கு, சிறப்பாக உணவு தானியத்தின் சேகரப் பிரச்னைக்குப் புதுவகையான தீர்வாகவே இந்த "காற்றுக் கிடங்கு" தோன்றியுள்ளது. வெப்ப சூழ்நிலைகளில் இந்தக் கிடங்கு உபயோகப்படுத்தப்படும் போது, இரண்டு அனுகூலங்கள் இருக்கின்றன. (1) பூச்சிகளால் தானியம் சேதமுறாமல் காப்பாற்றப்படுகிறது; (2) இந்தக் கிடங்கை ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்துக்குக் கொண்டு செல்லலாம்.

உறுதியான பிளாஸ்டிக் தகடுகளால் கட்டப்பட்ட பத்தாயத்தை எளிதில் சுருட்டி வைத்துவிடலாம். தானியம் சேகரிக்கும்போது, இதை மனையில் வைத்து, ஒன்று அல்லது இரண்டு மின் விசிறிகளின் உதவியால் சுமார் இருபது நிமிஷங்களுக்குள் இதற்குள் காற்றடித்து நிரப்பி விடலாம். காற்றடிப்பதால் பலூன் போன்ற உருவம் பெறும் இந்தப் பத்தாயத்தில் காற்றழுத்த விசையால் இயங்கும் குழாய்கள் மூலம் தானியத்தைக் கொட்டவேண்டும். பிறகு உபரியான காற்றை வெளியேற்றி விட்டு, காற்றுப் புகாவண்ணம் மூடியிட வேண்டும். பத்தாயத்திற்குள் காற்றுச் செல்ல வழியில்லாததால், அந்து முதலிய பூச்சிகள் தப்பி தவறிச் சென்றுவிட்டாலும், சுவாசிப்பதற்கு பிராணவாயு இல்லாமல் செத்துவிடும்.

இந்தப் பத்தாயம், காற்றடிக்கப்பட்டதும், 66 அடி விட்டமும் 22 அடி உயரமும் இருக்கும். தோற்றத்தில் இது எஸ்கிமோ மக்கள் வசிக்கும் வீடு போல காணப்படும். பெருங்காற்றால் பிளாஸ்டிக் உரைக்குச் சேதமுறாமல் இருப்பதற்காக, சுற்றிலும் முளைகளை அடித்துக், கயிற்றால் இழுத்துக் கட்டிவிடலாம்.



புது தில்லியில் நிறுவியுள்ள காற்றுக் கிடங்கு

மேழிச்செல்வம்

வெளியிடுபவர் :

தமிழ்நாடு விவசாயத் துறை நெறியாளர்
சென்னை-5.

வருட சந்தா	ரூ.	3·00
தனிப்பிரதி	ரூ.	0·25
ஆண்டு மலர்	ரூ.	0.50

உள்ளுறை

	பக்கம்
கோதுமைக்கு பிளாஸ்டிக் "காற்றுக் கிடங்கு"	2
தீவிர உற்பத்திப் பகுதி திட்டம் ..	5
எளிய நிலங்களிலும் நன்கு வளரும் சிறு தானியங்கள் ..	6
புதிய கரும்பு ரகங்கள் எவ்வாறு உற்பத்தி செய்யப்படுகின்றன ..	8
தென்னே 'கீழ்நடவு' செய்வதெப்படி	10
மண்ணுக்கு உரமிட்டு மகசூல் எடுங்கள்	11
தாவர நோய்களைத் தடுப்பதில் இரசாயன மருந்துகள்	13
ஆரஞ்சில் தோன்றும் நோய்களும் அவைகளைத் தடுக்கும் முறைகளும்	15
தென்னந்தோப்பில் எலித் தொல்லே	18
காட்டுக்கண்டங்கத்தரி ஒரு கொடிய களை—அழிப்பதெப்படி ? ..	20
சென்னை ராஜ்யத்தில் விவசாய வர்த்தகம்	22
விவசாயச் செய்திக் கதிர்	24
1964-ம் ஆண்டு மே மாதக் கால நிலே அறிக்கை	25
வெற்றிப் பாதை	27
கந்தகத்தூளும் சோளம் விளைச்சலும்	29
நீலகிரியில் மண்வளப் பாதுகாப்புத் திட்டச் சாதனைகள்	30
உரவிழா—பூவிருந்தவல்லி	31

விளம்பரங்கள் :

பாக்டம்பாஸ்	4
வால்டாஸ் லிமிடட்	7
ராலீஸ் இந்தியா லிமிடெட்	9
ராஜா பண்ணைத் தோட்டம்	10
கஜலக்ஷ்மி	13
ஸ்ரீ முருகன்	14
ஜெட்ஹிந்த்	17
பொட்டாஷ்	19
சேலம் நர்சரி	27
மீட்டர்	29

FACTAMFOS
F.A.C.T. LTD. ALWAYE
GRANULATED
AMMONIUM
PHOSPHATE
KERALA STATE
50 Kg. GROSS
பயிர்களுக்கு பயன்படும்
பாக்டம்பாஸ்
(அமோனியம் FACT பாஸ்பேட்)
அமோனியாவையும் பாஸ்பாரிக் அமிலத்தையும் 16 : 20 விகிதத்தில் தயாரிக்கப்படும் அதிசய உரம் பாக்டம்பாஸ் நிலைத்து நிற்கக்கூடியது. ஈரத்தை ஈர்க்காதது. தண்ணீரில் முற்றிலும் கரைந்து தங்கு தடையின்றி பாயவல்லது. பயிரின் பயனுள்ள பகுதிகள் எல்லாவற்றின் வளர்ச்சியையும் ஊக்குவிக்கும். பொதுவாக பயிர் ஆரோக்கியமாக வளர ஆக்கமளிக்கிறது.
உங்கள் தேவைக்கு பிராந்திய கிளை ஆபீஸுக்கு எழுதவும்.
FACT
foremost name in fertilisers!
பெர்டிலைசர்ஸ் அண்டு கெமிகல்ஸ் திருவிதாங்கூர் லிமிடெட்
ரிஜிஸ்டர்ட் ஆபீஸ் : ஏலூர், உத்யோகமண்டல் P.O. கேரள ராஜ்யம்
பிராந்திய கிளை ஆபீஸ் :
30, பாரதி ரோடு, ராம்நகர், கோயமுத்தூர்-9.
CRITERION-FT-327

மேழிச்செல்வம்

சுழன்றுமேர்ப் பின்ன துலகம் அதனு
லுழந்தும் உழவே தலை.

மலர் 21 | குரோதி ஞூ ஆடி மீ—1964—ஜூலை-ஆகஸ்டு [1889—1964] | இதழ் 7

தீவிர உற்பத்திப் பகுதித் திட்டம்

நெல், சோளம், கேழ்வரகு, நிலக்கடலை, பருத்தி முதலியவைகளின் தீவிர உற்பத்திக்கானதொரு திட்டம் செங்கல்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு, கோவை, சேலம், மதுரை, திருச்சி, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய 9 மாவட்டங்களில் 1964-65-ல் செயல்பட்டு வருகிறது. இது "தீவிர உற்பத்திப் பகுதித் திட்டம்" (Intensive Cultivation Area Programme) எனப்படுகிறது.

தீவிர சாகுபடி திட்டத்தை யொத்த இந்த திட்டம் 1963-64-ல் "வளர்ச்சி திட்டமாக" (Impact Programme 6 மாவட்டங்களிலேயே செயல்பட்டது. இவ்வருஷம் செங்கல்பட்டு, மதுரை, இராமநாதபுரம் ஆகிய 3 மாவட்டங்களிலும் செயலாகி இதுவே தற்பொழுது "தீவிர உற்பத்திப் பகுதித் திட்டம்" எனப்படுகிறது.

நெல்.—கோவை, வட ஆற்காடு, தென் ஆற்காடு, திருச்சி, திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம், செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் 23·58 லட்சம் ஏக்கரில் நெல் தீவிர சாகுபடி செய்யப்படுகிறது. திட்டத்தின் கீழ் போதிய இராசாயன உரம் கிடைக்கவும் முன்னெச்சரிக்கையாக பயிர்ப் பாதுகாப்பு முறைகளைக் கையாளவும் வசதி செய்யப்படுகிறது. பூச்சி பூசண மருந்துகள் 25 சத சலுகை விலையில் வழங்கப்படுகின்றன.

சோளம்.—கோவை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் 88,000 ஏக்கரில் சோளச் சாகுபடி தீவிரப்படுத்தப்படுகிறது. சோள விதைகளுடன் கந்தகம் கலந்து விதைக்க ஒரு ஏக்கருக்கு ஒரு அவுன்ஸ் வீதம் கந்தகம் இனாமாக வழங்கப்படுகிறது. 52 சத சலுகை விலையில் இராசாயன உரக்கலவை நெ. 1 அல்லது நெ. 2 வழங்கப்படுகிறது. ஒவ்வொரு 20 ஏக்கருக்கும் ஒரு இரசாயன உர சம்பந்தமான செயல் விளக்கம் நடத்தப்படுகிறது. இவை ஒவ்வொன்றுக்கும் 2 கிலோ இரசாயன உரம் இனாமாக வழங்கப்படுகிறது. பூச்சி பூசண மருந்துகள் 25 சத சலுகை விலையில் வழங்கப்படுகின்றன.

கேழ்வரகு.—கோவை வடஆற்காடு, தென் ஆற்காடு, சேலம், இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் 1·93 லட்சம் ஏக்கர் இறைவை கேழ்வரகுப் பயிருக்கு திட்டச் சலுகைகள் வழங்கப்படுகின்றன. இரசாயன உரக் கலவை நெ. 1 அல்லது நெ. 2, 25 சத சலுகை விலையில் வழங்கப்படுகிறது. ஒரு ஏக்கர் ராகி நடுவதற்குத் தேவையான நாற்றங்கால் ஒவ்வொன்றுக்கும் 1 கிலோ சி. ஏ. என். இனாமாகக் கொடுக்கப்படுகிறது. ஒவ்வொரு 20 ஏக்கருக்கும் ஒரு இரசாயன உர சம்பந்தமான செயல் விளக்கப் பாத்தி அமைக்கப்படுகிறது. இவை ஒவ்வொன்றுக்கும் 2 கிலோ இரசாயன உரம் இனாமாக வழங்கப்படுகிறது. சிறந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகள் மேற் கொள்ளப்படுவதில் கவனம் செலுத்தப்படுகிறது. பூச்சி பூசண மருந்துகள் 25 சத சலுகை விலையில் வழங்கப்படுகின்றன.

பருத்தி.—கோயம்புத்தூர் மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பருத்தி சாகுபடி நிலத் தொகுதிகளில் 65,000 ஏக்கர் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. பருத்தி வித்துகள் 20 சத சலுகை விலையில் வழங்கப்படுகின்றன. இரசாயன உர சம்பந்தமான செயல் விளக்கங்களுக்கு இனாமாக இரசாயன உரம் வழங்கப்படுகிறது. பூச்சி பூசண மருந்துகள் 50 சத சலுகை விலையில் வழங்கப்படுகின்றன.

நிலக்கடலை.—தென் ஆற்காடு, கோவை மாவட்டங்களில் 1-25 லட்சம் ஏக்கரில் நிலக்கடலை தீவிரச் சாகுபடி செய்யப்படுகிறது. பொறுக்கு வித்துக்கள், இரசாயன உரக்கலவைகள் வழங்கவும் வழிவகை செய்யப்படுகிறது. இரசாயன உர சம்பந்தமான செயல் விளக்கங்களுக்கு இனாமாக இரசாயன உரம் வழங்கப்படுகிறது.

உரம்.—மேற்கூறிய இந்த 5 பயிர்களுக்கும் தீவிர உரமிடும் திட்டத்தின்கீழ் இரசாயன உரங்கள் வாங்க குறுகிய காலக் கடன் வழங்கப்படுகிறது.

நீர்ப்பாசன வசதி.—480 வடிமுனைக் குழாய்க் கிணறுகள் தோண்ட ஒவ்வொன்றுக்கும் மொத்தச் செலவில் 10 சத விகிதம் (ரூ. 150-க்கு மேற்படாமல்) மான்யமாக வழங்கப்படுகிறது.

1▲

எளிய நிலங்களிலும் நன்கு வளரும் " சிறு தானியங்கள் "

[கே. திவாகரன், பி.எ., உதவி சிறுதானிய நிபுணர், கே. என். கோவிந்தசாமி, பி.எஸ்ஸி. (விவசாயம்,)
சி. சுரேந்திரன், பி.எஸ்ஸி. (விவசாயம்), சிறுதானிய அபிவிருத்திப் பண்ணை, கோவை-3.]

சோளம், கம்பு, ராகி ஆகியவைகளுக்கு அடுத்து முக்கியத்துவம் வாய்ந்தவை வரகு, சாமை, பனிவரகு, குதிரைவாலி ஆகிய " நுண் தானியங்கள் " (Minor millets). இவை வறண்ட நிலங்களிலும் எளிய நிலங்களிலும் நன்கு விளைகின்றன.

நமது மாநிலத்தில் வரகு சுமார் 6,84,933 எக்கராவிலும், சாமை சுமார் 4,57,075 எக்கராவிலும், தினை சுமார் 5,059 எக்கராவிலும், பனி வரகு சுமார் 4,581 எக்கர் பரப்பிலும் முக்கியமாக திருச்சி, சேலம், கோவை, இராமநாதபுரம், செங்கல்பட்டு, நீலகிரி போன்ற மாவட்டங்களில் பயிர் செய்யப்படுகின்றன.

ஆராய்ச்சியின் விளைவாக சில பொறுக்கு விதைகளும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அவைகளில் முக்கியமானவை தினை ரகங்கள்.

தினை கோ. 1.—மோசுதினை.

* மானுவாரியாக (செப்டம்பர்) ஆவணி-புரட்டாசி மாதங்களிலும், இறைவைப் பயிராக (மார்ச்-ஏப்ரல்) மாசி-பங்குனி மாதங்களிலும் பயிர் செய்யலாம்.

* வயது சுமார் 100 நாட்கள்.

* எக்கருக்கு 500 கிலோ தானியமும், 500-1,000 கிலோ வைக்கோலும் கிடைக்கும்.

* விதைத் தேவை வரிசையில் நட எக்கருக்கு 3-4 கிலோ.

* வரிசைக்கு வரிசை 3/4 அடி-1 அடி இடைவெளி விட்டு தெளிக்க வேண்டும்.

தினை கோ. 2.—சடைத்தினை.

இறைவைப் பயிராக (மார்ச்) தை-மாசி மாதங்களில் பயிர் செய்யலாம்.

* சுமார் 90 நாட்களில் அறுவடைக்கு வரும்.

* எக்கருக்கு சுமார் 400-500 கிலோ தானியமும் 300-1,000 கிலோ வைக்கோலும் கிடைக்கும்.

* வைக்கோல் கால்நடைக்கு நல்ல தீவனம்.

தினை கோ. 3.—பெருந்தினை.

* மானுவாரிப் பயிராக ஆவணி-புரட்டாசி (ஆகஸ்ட்-செப்டம்பர்) மாதங்களில் பயிர் செய்யலாம்.

* சுமார் 90 நாட்களில் அறுவடைக்கு வரும்.

* எக்கருக்கு 250-300 கிலோ தானியமும் 400-600 கிலோ வைக்கோலும் கிடைக்கும்.

வரகு ரகங்கள்.

தரிசு நிலங்களில் சாகுபடி செய்ய ஏற்றது வரகு.

கோ. 1.

* மானுவாரி பயிராக ஆவணி-புரட்டாசி (ஆகஸ்ட்-செப்டம்பர்) மாதங்களில் விதைக்கலாம்.

* எக்கருக்கு வரிசையில் விதைக்க 10 கிலோ கிராம் விதை தேவை.

* வரிசைக்கு வரிசை ஒரு அடி இடைவெளியில் விதைக்க வேண்டும்.

* சுமார் 140 நாட்களில் 400-500 கிலோ தானியமும் 1,000-1,500 கிலோ வைக்கோலும் கிடைக்கும்.

* இந்த ரகம் எல்லா மண் வகைகளுக்கும் ஏற்றது.

பி. எல். ஆர். 1.

* 120-130 நாட்களில் அறுவடைக்கு வரும். மற்றபடி இது கோ. 1 ரகத்தை ஒத்ததே.

* துவரையை வரகுடன் கலப்புப் பயிராக பயிர் செய்யலாம்.

சாமை கோ. 1.

* மானுவாரி பயிராக (ஆகஸ்ட்-செப்டம்பர்) ஆவணி-புரட்டாசி மாதங்களில் பயிர் செய்யலாம்.

* எக்கருக்கு 4-5 கிலோ கிராம் விதை தேவை.

* வரிசைக்கு வரிசை ஒரு அடி இடைவெளி விட வேண்டும்.

* 90 நாட்களில் சுமார் 200-250 கிலோ தானியமும், 400-500 கிலோ வைக்கோலும் கிடைக்கும்.

* வைக்கோல் கால்நடைகளுக்கு நல்ல தீவனமாகும்.

பனி வரகு கோ. 1.

* மானுவாரி பயிராக கார்த்திகை-மார்கழி (நவம்பர்-டிசம்பர்) மாதங்களில் விதைக்கவும்.

* எக்கருக்கு 4-5 கிலோ விதை தேவை.

* வரிசைக்கு வரிசை ஒரு அடி இடைவெளி விட வேண்டும்.

* சுமார் 90 நாட்களில் 250-300 கிலோ தானியமும் 500 கிலோ வைக்கோலும் கிடைக்கும்.

தரிசு நிலங்களை விளை நிலமாக்கி தமிழ் நாட்டின் உணவுப் பற்றுக்குறையைப் போக்க நுண் தானியங்களைப் பயிர் செய்யுங்கள்.

இரண்டு திறமை மிக்க கருவிகள்

பண்ணை வேலைகளில் மேலும் சிறந்த சிக்கனத்திற்கும், அதிகமான விளைச்சல்களுக்கும்

டிராக்டரில் பொருத்தப்பட்ட வட்டமான ஆப்ஸெட் (OFFSET) பரம்புச் சட்டங்கள்

டிராக்டரில் பொருத்தப்பட்ட வட்டமான ஆப்ஸெட் பரம்புச் சட்டங்கள் செப்பனிடப்படாத கரடுமுரடான பாதைகளிலும், பழத்தோட்டங்களிலும் திறந்த வெளி நிலங்களிலும் திறமைமிக்க சேவை அளிப்பதற்கென அமைக்கப்பட்டிருக்கின்றன. இவை சிறந்த முறையில் புல்பூண்டுகளை வெட்டி, மண்கட்டிகளை உடைத்து, மண்ணைப் பொடியாக்கி, அதில் காற்றுப் புகும்படியாகச் செய்கின்றன. இவற்றின் தனிப்பட்ட தன்மைகளைப் பாருங்கள்.

1. எல்லாவிதமான பிர்மாண்டமான முப்பொருத்த இணைப்புகளிலும் பொருந்தும்படியாக அமைக்கப்பட்டிருக்கிறது. (அது எந்த உருளும் டிராக்டரானாலும் சரி)
2. வளைவுகளில் வெல்டு செய்யப்பட்ட வலுவான எஃகுச் சட்டம்.
3. இறக்குமதி செய்யப்பட்ட, உஷ்ணத்தில் பதனிடப்பட்ட வட்டத்தகடுகள்.
4. நிச்சயமாக ஆழமாக ஊடுருவிச்செல்லும் தன்மை.
5. கரடுமுரடான பூமியில் வளைந்துகொடுப்பதற்கேற்ப இணங்கிவரும் ஸ்ப்ரிங் பொருத்தப்பட்ட மேல் இணைப்பு.

மேலும், 14 முதல் 50 ஹார்ஸ் பவர் கொண்ட எந்த டிராக்டருடனும் பொருந்தும் இணைப்பு வகைகளும் கிடைக்கும்.



டிராக்டர்களில் பொருத்தப்பட்ட நிலத்தைப் பண்படுத்தும் இயந்திரங்கள் (கல்டிவேடர்ஸ்)

டிராக்டர்களில் பொருத்தப்பட்ட, நிலத்தைப் பண்படுத்தும் இயந்திரங்கள், இந்தியாவில் பரந்த அளவில் மாறுபட்ட மண்ணின் தன்மைகளுக்கேற்றபடி அமைக்கப்பட்டிருக்கின்றன, லேசான மண்முதல் அடர்த்தியான மண்கள்வரை எல்லா மண்களிலும் உழுவதற்கான பற்பல தேவைகளைப் பூர்த்தி செய்யும் வெவ்வேறு மாடல்களில் கிடைக்கும். நீரியல் விசையும் (ஹைட்ராலிக் லிப்டு), முப்பொருத்த இணைப்பும் கொண்ட, 14 முதல் 50 ஹார்ஸ் பவர் கொண்ட உருளும் டிராக்டர்களுக்கேற்ற வெவ்வேறு அளவுகளில் கிடைக்கும்.

முழு விவரங்களுக்கு எழுதுங்கள்:

VOLTAS

வால்டாஸ் லிமிடட்

எர்த் மூவிங், மைனிங், அண்டு அக்ரிகல்சரல் டிவிஷன்,
டாக்டர் அம்பேட்கர் ரோடு, சின்ச்போக்லி, பம்பாய்-33

கல்கத்தா . மதருஸ் . புதுடில்லி . பங்களூர்
கொச்சின் . அஹமதாபாத் . ஸெகந்திராபாத்
பாட்ணு . நாக்பூர் . போபால்.

VOL. 618 A TAMEVEREST

புதிய கரும்பு ரகங்கள் எவ்வாறு உற்பத்தி செய்யப்படுகின்றன ?

எஸ். சார்லஸ் தானியேல், எஸ். வைத்தியநாதன்., கரும்பு ஆராய்ச்சிப் பண்ணை, குடியேற்றம்.

விவசாயிகளுக்கு பணம் சம்பாதித்துக் கொடுக்கும் பயிர்களில் கரும்பு மிகவும் முக்கியமானது. கரும்பு சர்க்கரை ஏற்றுமதி செய்வதின் மூலம் அந்நியச் செலாவணியும் கிடைக்கிறது. அந்தத் தேவையை பூர்த்தி செய்ய மத்திய சர்க்கார் எல்லா முயற்சிகளையும் செய்து வருகிறார்கள். வரும் ஆண்டில் 1963-64-ல், 33 லட்சம் டன் சர்க்கரை உற்பத்தி செய்யவேண்டும் என்றும் திட்டமிட்டுள்ளார்கள். இந்த திட்டத்தை நிறைவேற்ற அதிக மகசூலும் அதிக சர்க்கரையும் தரக்கூடிய உயர்ந்த ரகக் கரும்புகள் இன்றியமையாதவை.

ஆகையால் இந்த சந்தர்ப்பத்தில் புதிய உயர்ந்த ரகக் கரும்புகள் எவ்வாறு உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு அளிக்கப்படுகின்றன என்பதைத் தெரிந்துக் கொள்வோம்.

"பழையன கழிந்து புதியன புகுதல்" என்பது பொன்மொழி. சுமார் 20 ஆண்டுகளுக்கு முன் ஜாவா, பிஜி போன்ற குறைந்த அளவில் மகசூலும் சர்க்கரைச் சத்தும் தரக்கூடிய கரும்பு ரகங்கள்தான் பயிரிடப்பட்டு வந்தன. மேற்சொன்ன பொன்மொழிக்கேற்ப இந்த பழைய ரகங்கள் எல்லாம் கழிந்து அதிக மகசூலும் சர்க்கரைச் சத்தும் கொடுக்கக்கூடிய கோ. 419, கோ. 449, கோ. 658, கோ. 785, கோ. 740 போன்ற புது ரகங்கள் புகுத்தப்பட்டு உள்ளன. இந்தக் கரும்பு ரகங்கள் எவ்வாறு உற்பத்தி செய்யப்படுகின்றன என்ற விபரம் கீழே கொடுக்கப்பட்டு உள்ளது.

சாதாரணமாக கரும்பு பயிரிடுவதற்கு கரும்பு கரணைகள் விதைகளாக உபயோகப்படுத்தப்படுகின்றன. புதிய கரும்பு ரக உற்பத்திக்கு (Breeding) கரும்பு விதைகள் விதைத்தே பயிரிடப்படுகின்றது. இவ்வாறு விதைகள் மூலம் கரும்பு பயிர் செய்வதற்கு கோவையில் தக்க சீதோஷ்ண நிலை உள்ளதால் கோவையில் மத்திய கரும்பு ஆராய்ச்சி நிலையம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

அதிக மகசூல், சர்க்கரை சத்து, பூச்சி பூஞ்சண நோய்கள் தடுக்கும் சக்தி, இவைகளை நோக்கமாகக் கொண்டு பல கரும்பு ரகங்களை ஒன்றுடன் ஒன்று செயற்கை மகரந்த சேர்க்கை செய்யப்பட்டு (cross fertilisation) கரும்பு விதைகளை உற்பத்திசெய்கின்றனர்.

கரும்பு விதைகளுக்கு ஒரு மாதம் வரைதான் முளைப்புத் தன்மை இருக்கும். விதைகள் 3′×2′ உயர்ந்த செங்கல் பாத்திகளில் (Raised Brick walled fiats) பாத்திக்கு 10 அவுன்ஸ் வீதம் டிசம்பர், ஜனவரி மாதங்களில் நாற்றுக்கு விடப்படுகின்றன. 4 முதல் 6 வாரங்களுக்குள் இந்த நாற்றுகள் 6″×6″ இடைவெளியுள்ள முதல் தரை நாற்றங்காலில் (First Ground Nursery) நடப்பட்டு மூன்று மாதம் வரை வளரவிடப்படுகின்றன. நல்ல கிளைப்பும் வீரியமும் உள்ள ரகங்கள் இரண்டாவது தரை நாற்றங்காலில் (Second Ground Nursery) 2′×2′ இடைவெளிவிட்டு நடப்படுகின்றன. இங்கு இவைகள் 10 மாதம்வரை வளர விடப்படுகின்றன. நல்ல கரும்புகளை திரும்பவும் கரும்புக்கரணைகள் வெட்டி அபிவிருத்தி செய்யப்படுகிறது (Vegetative propagation). நல்ல ரகக் கரும்புகளை பரிசோதனைப் பாத்திகளில் (Test Plots) நட்டு அவைகளின் வளர்ச்சி, வீரியம் முதலியவை பற்றி குறிப்பு எடுக்கப்படுகிறது. அடுத்த நவம்பர் டிசம்பர் மாதங்களில் கரும்பு அறுவடை செய்யப்பட்டு சர்க்கரைச் சத்து நிர்ணயிக்கப்படுகிறது.

நல்ல மகசூலும், சர்க்கரைச் சத்தும் மற்ற குணங்களும் அமைந்த கரும்பு ரகங்கள் கோவை கரும்பு ஆராய்ச்சி நிலையத்திலிருந்து பிராந்திய கரும்பு ஆராய்ச்சிப் பண்ணைகளுக்கு அனுப்பப்படுகின்றன. அங்கு விதைகளை சீக்கிரமாக பெருக்க இப்பயிர் 6 மாதம் வளர்ந்ததும் வெட்டப்பட்டு ஆகஸ்ட்டு அல்லது செப்டம்பர் மாதத்தில் மறுபடியும் நடப்படுகின்றது. இந்த நடவுக்கு குறுகிய காலப்பயிர் (Short crop) எனப் பெயர். இந்த முறை மூலம் விதைகள் 10 மடங்கு பெருகிவிடுகின்றன.

அடுத்த பிப்ரவரி, மார்ச் மாதத்தில் இந்த கரும்பு ரகங்கள் வெட்டப்பட்டு நடை முறையில் சாகுபடியில் உள்ள கோ. 419, கோ. 449, ரகங்களுடன் நடப்படுகின்றன. இதற்கு ரக வாரிப் பரிசோதனை (Varietal study plots) என்று பெயர். இந்தப் பரிசோதனை இரண்டு ஆண்டுகள் தொடர்ந்து நடத்தப்படுகிறது. இந்த சோதனைகளில் கரும்பின் முளைப்புத் தன்மை, வீரியம், கிளைப்புத்தன்மை பூச்சிநோய்கள் இவைகளைத் தடுக்கும் சக்தியும் இதர குணங்களும் மிகவும் ஜாக்கிரதையாக ஆராயப்படுகின்றன. டிசம்பர், ஜனவரி, பிப்ரவரி, மார்ச், எப்ரல் மாதங்களில் அறுவடை செய்யப்பட்டு அதன் சர்க்கரை சத்தும் நிர்ணயிக்கப்படுகிறது.

டிசம்பர் ஜனவரி மாதங்களில் 16 சதவிகிதம் சர்க்கரைச் சத்தும் 85 சத விகிதம் தூய்மையும் உள்ள கரும்பு ரகங்கள் முந்திய பட்டத்திற்கும் (Early season), பிப்ரவரி, மார்ச் மாதங்களில் 18 சத விகிதம் சர்க்கரைச் சத்தும் 85 சத விகிதம் தூய்மையும் உள்ள கரும்பு ரகங்கள் மத்திய பட்டத்திற்கும் (Mid season), எப்ரல்—மே மாதத்தில் 16 சத விகிதம் சர்க்கரைச் சத்தும் 85 சத விகிதம் தூய்மையும் உள்ள கரும்பு ரகங்கள் பிந்திய பட்டத்திற்கும் (Late season) ஏற்றவை என்றும் நிர்ணயிக்கப்படுகின்றது. இதன்படி அதிக மகசூலும் சர்க்கரைச் சத்தும் கொடுக்கும் ரகங்கள் அடுத்த பரிசோதனை நிலைக்கு தேர்வு செய்யப்படுகின்றன. இந்த சோதனையில் தேர்வு பெறாத மட்ட ரகக் கரும்புகள் சோதனையிலிருந்து விலக்கப்படுகின்றன.

முன் மகசூல் சோதனை (Preliminary yield Trial).

மேற்கூறியவாறு தேர்வு செய்யப்பட்ட கரும்பு ரகங்கள் சோதனைகளில் இரண்டு ஆண்டுகள் தொடர்ந்து பரிசோதனை செய்யப்படுகின்றன. இந்தக் கரும்பு ரகங்கள் நடைமுறைச் சாகுபடியில் உள்ள கரும்பு ரகங்களுடன் (கோ. 419, கோ. 449, கோ. 658) சேர்த்து நடப்படுகின்றன. இரண்டு ஆண்டுகளில் கரும்பின் முளைப்புத் தன்மை, வீரியம், இளைப்புத் தன்மை, பூச்சி நோய்கள், இவைகளை எதிர்க்கும் தன்மை முதலிய குணங்கள் பற்றி மிகவும் ஜாக்கிரதையாக ஆராயப்படுகின்றன. இந்தப் பரிசோதனையிலும் 10, 11, 12 மாதங்களில் கரும்பு வெட்டப்பட்டு சர்க்கரைச் சத்து நிர்ணயிக்கப்படுகின்றது. கரும்பு நன்கு முதிர்ச்சி அடைந்ததும் 11½ அல்லது 12 மாதங்களுக்குப் பின் அறுவடை செய்யப்பட்டு மகசூல் கணக்கிடப்படுகின்றது.

கரும்பு முதிர்ச்சிப் பரிசோதனை (Maturity observation)

எந்த மாதத்தில் வெட்டினால் அதிக அளவு சர்க்கரையும் வெல்லமும் கிடைக்கும் என்பதை நிர்ணயிக்க முன் மகசூல் பரிசோதனையிலும் நடப்பட்டு 11, 12, 13, 14 மாதங்களில் வெட்டப்பட்டு சர்க்கரைச் சத்து நிர்ணயிக்கப்பட்டு வெல்லமும் தாயாரிக்கப்படுகிறது.

இந்தப் பரிசோதனை நடக்கும்போதே மிகவும் நல்ல மகசூலும் சர்க்கரை சத்தும் கொடுக்கும் ரகங்களை விவசாயிகள் நிலங்களிலும் நடைமுறை சாகுபடியில் உள்ள கரும்பு ரகங்களுடன் நடப்படுகிறது (District trial).

மகசூல் பரிசோதனையிலும் விவசாயிகள் நிலங்களில் நடத்தப்படும் பரிசோதனைகளிலும் அதிக மகசூலும் சர்க்கரைச் சத்தும் கொடுக்கும் கரும்பு ரகங்கள் விவசாயிகளுக்கு புதிய ரகங்களாக அளிக்கப்படுகின்றன. இந்த முறையில் ஒரு புதிய கரும்பு ரகம் வெளியிட ஏழு வருடம் ஆகிறது.

ஆகவே உங்களுக்கு அருகாமையில் இருக்கும் கரும்பு ஆராய்ச்சிப் பண்ணைகளில் இருக்கும் ஆராய்ச்சியாளர்களுடனோ அல்லது பிரத்யேக கரும்பு விளக்குனரையோ அல்லது விவசாய விஸ்தரிப்பு அலுவலரையோ கலந்து ஆலோசித்து அதிகமான மகசூலும் சர்க்கரை சத்தும் உள்ள புதிய கரும்பு ரகங்களை நட்டு நமது நாட்டின் சர்க்கரை உற்பத்தியை பெருக்குங்கள்.

அரசினர் தென்னை நாற்றங்கால்களில் கிடைக்கும் தென்னங் கன்றுகளின் விபரம்

கிடைக்குமிடம்.	கிடைக்கும் காலம்.	கையிருப்பு எண்ணிக்கை.	ஒன்றின் விலை. ரூ.பை.
(1)	(2)	(3)	(4)
தென்னை நாற்றங்கால், ஆத்தூர், செங்கல்பட்டு ஜில்லா;	நவம்பர் மாதம்	1,000	0–65

தந்தையைப்போல் தனயன்...

ஆம், சில விஷயங்களில்தான்...முக்கியமான
வேற்றுமையோ? ஆமாம்! ராமன் தன் தந்தையைப்போல் ஒரு
விவசாயியாகத்தான் இருப்பான். ஆனால் அவன் நிலத்தை
உழுது பயிரிடும் விதமே வேறுதான். தரத்திலுயர்ந்த
விதைகளையே விதைப்பான். விஞ்ஞான ரீதியில் மாற்றி
மாற்றிப் பயிரிடுவான். நீர்ப்பாசன வசதிகளை நன்கு
பயன்படுத்துவான். ராலீஸ் தயாரிப்பதுபோன்ற
சமநிலை உரக்கலவைகளைக்கொண்டு தனது நிலங்களை
வளப்படுத்துவான். ராலீஸ் தயாரிக்கும் "மரம்மார்க்" உரங்கள்
இந்திய விவசாயிகளுக்குத் தரமான, வளமான விளைச்சலை
அளிக்கின்றன. ராலீஸ் உரங்களில் முதலீடு செய்யப்படும்
1 ரூபாய், 4 ரூபாய் அதிகப்படி விளைச்சலைத் தருகிறது.



RALLIS TREE BRAND FERTILIZERS

ராலீஸ் இந்தியா லிட்.

இந்தியா முழுவதும்

தென்னை 'கீழ்நடவு' செய்வதெப்படி?

வி. ஆர் வரதராசன், பி. எஸ்ஸி (விவசாயம்), தென்னை அபிவிருத்தி உதவியாளர், தென்னை தீவிர உற்பத்தித்திட்டம், அதிராம்பட்டினம்.

ஒவ்வொரு தென்னந்தோப்பிலும் வயது ஆக ஆக மரங்களின் விளைவு குறைந்து வருகிறது. குலே குலேயாய்க் காய்த்த மரம் கூட தன் வயது முதுமையில் காய்ப்பில் குன்றி வருகின்றது. இதுகண்ட தோப்புக்காரன் வயதான மரத்தின் கீழ் பொறுக்குத் தென்னம்பிள்ளையை நட முற்படுகிறுன். காய்ப்பில் குன்றிய வயதான மரங்களின் கீழ் புதுக்கன்றுகளை நடும் இந்தத் தொடர்ச்சியான முறையே 'கீழ் நடவு' (Under planting) எனப்படுகிறது. மேலும் புதிதாக ஆரம்பித்த தென்னந்தோப்பில் ஏதாவது தவறுகள் செய்திருப்பின் அதைத் திருத்திக்கொள்ளவும், ஆராய்ச்சி முறையில் கண்டதை நடைமுறையில் செய்து பலன் காணவும் கீழ்நடவு ஒரு நல்ல சந்தர்ப்பத்தை அளிக்கின்றது. புதிய நடவு போன்று கீழ் நடவையும் மிகுந்த கவனத்துடன் செய்ய வேண்டும்.

எப்போது கீழ்நடவு செய்வது?

நல்ல பராமரிப்பு இருந்தும் போதிய மகசூல் கிடைக்கா• விட்டால் கீழ்நடவு செய்யலாம். தோப்பிலிருந்து தொடர்ந்து மகசூல் கிடைக்க சரியான காலத்தில் கீழ் நடவு செய்ய வேண்டும். முன்னதாகவே கீழ்நடவு செய்தால் சிறு பிள்ளைகள் பெரிய மரங்களின் நிழலால் பாதிக்கப்படலாம். மேலும் புதிதாக நடப்பட்ட மரங்கள் வயதான மரங்களோடு போட்டியிட்டு அவைகளின் விளைவைக் குறைத்துவிடும். கீழ் நடவு வெகு தாமதப்பட்டால் வயதான மரங்களில் காய்ப்பில்லாமல் போய்விடும். புதிதாக நடப்படும் மரங்கள் காய்க்க ஆரம்பிக்கும் வரை தோப்பில் யாதொரு விளைவும் இல்லாமல் போய் விடும்.

கீழ் நடவு செய்யும் முறை

* வயதான மரங்கள் நான்கிற்கு மத்தியில் ஒரு பிள்ளை நடலாம். மரங்களிலிருந்து போதிய தூரத்திலேயே புதுப்பிள்ளைகளை அடி நடவு செய்யவேண்டும். வயதான மரத்திற்கு மிக அருகிலேயே நடவேண்டி வந்தால் அம்மரத்தை முதலில் வெட்டிவிடவேண்டும். 5 அடியிலிருந்து 6 அடி ஆழத்திற்கு உள்ள வேர்களையெல்லாம் கொத்தி எடுக்கவேண்டும். குப்பை கூளங்களை குழிக்குள் போட்டு தீயிட்டு அங்குள்ள பழைய வேர்களையெல்லாம் எரிக்கவேண்டும். பின் நல்ல மண்ணைக் குழிக்குள் வேண்டிய அளவு நிரப்பிக் குழியைத் தயாரிக்கவேண்டும்.

* தென்னந்தோப்பின் விளைச்சல், நடும் தென்னம் பிள்ளைகளின் தரத்தைப் பொறுத்ததே. ஆகவே கீழ்த்தரமான பிள்ளைகளை உபயோகப்படுத்தாமல் சர்க்கார் தென்னை நாற்றங்கால்களில் கிடைக்கும் பொறுக்குத் தென்னங் கன்றுகளேயே உபயோகிக்கவேண்டும்.

* ஏற்கனவே இருந்த மரங்களில் மண்ணில் உள்ள சத்துக்களை எடுத்துக்கொண்டுவிடுகின்றன. ஆதலால் கீழ்நடவு செய்து நல்ல பலன் கிடைக்க ஆரம்பம் முதல் உரம் போடவேண்டும்.

* கீழ்நடவு செய்த ஆறு வருடத்திற்குள், அதாவது பிள்ளைகள் காய்ப்புக்குவரும் தருணத்தில், எல்லா வயதான மரங்களையும் நீக்கவேண்டும்.

* பூச்சி பூஞ்சண நோய்கள் பழைய தோப்பில் இருந்திருந்தால் அவற்றின் முட்டைகள், கிருமிகள் முதலியவை புதிதாக நடவு செய்திருக்கும் பிள்ளைகளுக்கும் பரவிவிடும். ஆகவே, காலத்தே தகுந்த பயிர்ப்பாதுகாப்பு முறைகளைக் கையாளத் தவறக்கூடாது.

அதிக மகசூலால் அதிக வருவாய் பெறும்
பெரிய தோட்டக்காரர்கள்
சிறந்த ஜாதி காய்கறி விதைகள் பெறுமிடம்:

ராஜா பண்ணைத் தோட்டம்

இக்காலத்துக்குத் தகுதியான
நோய் அணுகா, அதிக மகசூல் தரும் கவர்ச்சிகர ஜாதி

வெண்டை

மிகப் பெரிய நீண்ட, சதை பருத்த ருசி
மிகுந்த அதிசய ஜாதி

கொத்தவரை

ருசி மிகுந்த, கவர்ச்சிகரமான 14 வித புகழ் பெற்ற

கத்திரி

புகழ் பெற்ற பெரிய ரோஜா உருண்டை பல்லாரி

வெங்காயம்

இதர பலவித உயர்ந்த கோடை மிளகாய், முள்ளங்கி ஜாதிகள், பரங்கி, பூசணி, வெள்ளரி முதலான காய்கறி விதைகள், பழச் செடிகள், தென்னங் கன்றுகள், களை நாசினிகள்

கிடைக்குமிடம் :—

ராஜா பண்ணைத் தோட்டம்

தபால் பெட்டி எண் 1423, சென்னை-17.

தந்தி : RAJSEED போன் : 42262

மண்ணுக்கு உரமிட்டு மகசூல் எடுங்கள்

(எஸ். வரதராசன் எம். எஸ்ஸி., கோவை.)

இரசாயன உரங்கள் நிலத்திற்கு தீங்கிழைக்கின்றன என்ற நம்பிக்கை இப்போது உண்மை என கருதப்படு வதில்லை. கம்போஸ்ட், தொழு எரு போன்ற நாட்டு எருக் களுடனும் பயிர் சுழற்சி முறைகளுடனும் இரசாயன எருக்களை மதியூகமாக உபயோகித்தல் வேண்டும்.

புதிதாக சாகுபடிக்கு கொண்டு வரப்பட்ட நிலத்தில் நல்ல மகசூல் தரக்கூடிய தாவர உணவுப் பொருள்கள் அதிகம் இருக்கும். அதுபோலத்தான் நல்ல வளமான மண்ணும் நல்ல விளைச்சல் தரும். ஒவ்வொரு பயிரும் கொஞ்சம் கொஞ்சமாய் மண்ணிலிருக்கும் சத்தை எடுத்து விடுவதால் வருடா வருடம் ஒரே நிலம் நல்ல விளைச்சலை கொடுத்துக் கொண்டே இருக்காது. நைட்ரஜன், பாஸ்பரஸ், பொட்டாசியம் மற்றும் பல இவ்வாறாக மண்ணிலிருந்து பயிர்களால் எடுத்துக் கொள்ளப்படும் தாவர உணவுச் சத்துக்களாகும். இத்தாவர உணவுச் சத்துகள் நிலத்தி லுள்ள கரிம பொருள்களுடன் சேர்ந்து பயிர் வளர உதவு கின்றன.

மண்ணிலுள்ள கரிம பொருள்கள் தாவர கழிவுகளி லிருந்து உண்டாகின்றன. தாவர வளர்ச்சிக்குத் தேவை யான தண்ணீரை இது பஞ்சுபோல் மண்ணில் பிடித்து வைக்கிறது. மண்ணை மெதுவாக உழவு செய்ய இலகு வாகவும் மாற்றுகிறது. கோடிக்கணக்கான நன்மை பயக்கும் உயிரணுக்கள் தங்க உதவுகிறது. தாவர கழிவுகள் அழுகுவதால் உண்டானதால் இக்கரிம பொருள் தாவரங்கள் மறுபடியும் உபயோகிக்க தேவையான தாவர சத்துக்களனைத்தையும் கொண்டுள்ளது. அநேக நிலங்கள் முதன் முதலில் சாகுபடிக்கு கொண்டு வரப்படும்போது இக்கரிம பொருள்களை அதிக அளவு கொண்டிருக்கும். இக்கரிம பொருள், தாவர இலைகள், புல் பூண்டுகள், செடிகளின் வேர்கள் இவைகள் மக்குவதாலும் மற்றும் புழு, பூச்சிகள் மிருகங்கள், இறந்து நிலத்தில் மக்கு வதாலும் உண்டாகிறது. சாகுபடி செய்யப்படுகிற நிலத்தில் இக்கரிம பொருள் இருக்காது. நிலத்தில் உருவாகி இக் கரிம பொருள் அங்கு இருந்துகொண்டே இருக்காது. சாகுபடி நிலங்களில் அதிக உஷ்ணப் பிரதேசத்தில், இக் கரிம பொருட்கள் தொடர்ந்து உபயோகிக்கப்படுகின்றன. அதிலுள்ள தாவர சத்துப் பொருள்கள் வளரும் பயிர் களால் உபயோகப்படுத்தப்படுகின்றன. ஒரு பகுதி மழை நீரால் கரைத்துச் செல்லப்படுகிறது. ஆகவே, தொடர்ந்து நிலத்தில் சாகுபடி செய்து நல்ல பயிர் எடுக்க எடுக்க இக் கரிம பொருள்கள் குறைந்து நிலம் சத்தற்று உயிரற்றதாகி விடுகிறது.

நிலம் பயன் கொடுக்கக் கூடியதாக இருக்க கரிமப் பொருளைப் புதுப்பிதுக்கொண்டே இருக்கவேண்டும். தொழு உரம் அல்லது கம்போஸ்ட் உரம் போடுவதாலும் பசுந்தாள் உரங்கள் வளர்த்து அதை நிலத்தில் மடக்கி உழுவதாலும் இதை அடையலாம். நிலத்திற்கு வெறும் கரிம பொருட்கள் கொடுப்பது மட்டும் போதாது. நல்ல பயன் தரும் நிலம் கரிம பொருள் தவிர போதிய நைட் ரஜன், பாஸ்பாரிக் அமிலம், பொட்டாஷ், சுண்ணாம்பு மற்றும் பல மூலகங்களைக் கொண்டதாக இருக்கவேண்டும். அவ்வாறு இருந்தால் மட்டும் போதாது. அவை தாவரங் களுக்குக் கிடைக்கக்கூடிய நிலையில் இருக்க வேண்டும். அதாவது வேர்கள் அவற்றை உறிஞ்சும்படியான நீரில் கரையும் நிலையில் அவை இருக்கவேண்டும். ஒரு மூலகத்தின் இடத்தை மற்ற மூலகம் நிரப்ப முடியாது என்பதை நன்கு நினைவில் வைக்கவேண்டும். நல்ல விளைச்சலைப் பெற நிலத்தில் ஒவ்வொரு வகை பயிர்ச் சத்தும் போதிய அளவில் இருக்கவேண்டும். எல்லா பயிர்ச் சத்துகளும் இருந்து ஒரே ஒரு பயிர்ச்சத்து, உதாரண மாக, பாஸ்பர அமிலம், குறைவாயிருக்கிறது என்றாலும் பயிர் வளர்சசி தடைப்படும்.

தாவரச் சத்துக்களின் வேலைகள்.

நிலத்தில் பெரும்பாகம் நைட்ரஜனை கரிம பொருளே அழிக்கிறது. அதிக அளவு நைட்ரஜன் பயிரை பெரிய தாயும் அகல, கரும்பச்சை நிறமுள்ள இலைகளுள்ள தாகவும் வளரச் செய்கிறது. பயிர் துரிதமாகவும் வளரு கிறது. அதிக பாஸ்பாரிக் அமிலம் பயிரை சீக்கிரத்தில் பூவிடச் செய்கிறது. நல்ல, முழுதும் நிறைந்த தானியத் திற்கும் பாஸ்பர அமிலம் அதிக தேவை. நைட்ரஜனும் பாஸ்பாரிக அமிலமும் அதிக முக்கியமான இரண்டு தாவர உணவுகளாகும். அவைதான் நமது அநேக நிலங் களில் குறைவாகக் காணப்படுகின்றன. செடியில் தண்டு, இலை முதலிய பாகங்கள் பலமுள்ளதாகவும் நேராகவும் வளர்வதற்கு பொட்டாசியம் மிகவும் அவசியம். மற்ற பல வழிகளிலும் பொட்டாஷியம் மிகவும் முக்கியம். நம்முடைய நிலங்களில் தேவையான பொட்டாஷ் இருக்கிறது. இம் மூன்று தாவர உணவுச் சத்துக்களும் பயிர்களுக்கு அதிக அளவு தேவையானதால் அவைகளை "முப்பெரும் சத்துக்கள்" என அழைக்கிறோம். உயர்ந்த மகசூல் பெற இம் மூன்றுமே அதிக அளவு தேவை.

எவ்வளவு மக்கு, நைட்ரஜன், பாஸ்பாரிக் அமிலம் மற்றும் பொட்டாஷ் இருந்தும் நிலம் பண்படுத்தப் படாமலும் வடிகால் வசதியில்லாமலும் இருந்தால் அந்நிலம் பயனளிக்காது. களைகளை பயிருக்கேற்ற சாகுபடி முறையில் தடுக்கவேண்டும். அநேகமாக நம் நிலங்களில் நல்ல இலாபகரமான பயிரை விளைவிக்கும் அளவு தாவர உணவுச் சத்துக்கள் தாவரங்கள் உட்கொள்ளும் நிலையில் இல்லை. இக் குறைவுகளை பூர்த்தி செய்யவேண்டும். கம் போஸ்டும் தொழு எருவும் நிலத்தை நல்ல பலனளிக்கும் அளவுக்கு உயர்த்தும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. ஆனால் அவை எல்லா பயிர்களுக்கும் எல்லா நிலங் களுக்கும் தேவையான அளவுக்கு கிடைக்காமலிருக்கலாம்.

ஆகையால் நிலத்திலிருந்து அவ்வப்போது பயிர்கள் எடுத்து விட்ட சத்துக்களையும் மற்றும் மழை நீரால் அடித்துச் செல்லப்பட்ட தாவர சத்துக்களையும் நாம் ரசாயன உரங்கள் மூலமாக நிலத்திற்கு அளிக்கவேண்டும்.

அமோனியம் சல்பேட், கால்சியம் அமோனியம் நைட்ரேட், அமோனியம் சல்பேட் நைட்ரேட், யூரியா ஆகியவை நைட்ரஜன் சத்துள்ள ரசாயன உரங்களாகும். சூபர் பாஸ்பேட், டபிள் சூபர் முதலியன பாஸ்பரிக் அமிலம் தரக்கூடிய இரசாயன உரங்களாகும். பொட்டாசியம் சல்பேட் மற்றும் பொடாசியம் குளோரைடு ஆகியவை பொடாஷ் சத்து அளிக்கும் இரசாயன உரங்களாகும். பொடாசியம் குளோரைடு மியூரியேட் ஆஃப்பொட்டாஷ் என்றும் சொல்லப்படுகிறது.

நமது நிலங்களுக்கு எப்படிப்பட்ட உரங்கள் என்ன அளவில் தேவை ?

மண்ணை பரிசோதிக்காமலும் என்ன பயிர் விளைவிக்கப் போகிறார்கள் என்பதைத் தெரியாமலும் உர அளவையும் பெயரையும் சிபாரிசு செய்ய முடியாது. நிலம் அமிலநிலை, உப்பு நிலை, காரநிலை, நடுநிலை ஆகிய பல நிலைகளிலிருக்கக் கூடும். முன்பு பயிரிடப்பட்ட பயிரும் அதை பயிரிட்ட விதமும் தெரிந்திருக்க வேண்டும்.

ஆகவே நல்ல மகசூல் தர நிலத்தின் தேவையை அறிய சிறந்த வழி மண்ணைப் பரிசோதனைச் சாலையில் பரிசோதிப்பது ஒன்றே.

மண் பரிசோதனை நிலையங்கள்

மண் பரிசோதனை நிலையம் மண்ணிலுள்ள குறைபாடுகளை அறிந்து அதற்குத் தகுந்த சிகிச்சை முறையை சிபாரிசு செய்யும் ஒரு வைத்தியசாலையைப் போன்றதாகும். இம் மண் பரிசோதனை நிலையங்கள் விவசாயிகளின் நன்மைக்காகவே அமைக்கப்பட்டிருப்பனவையாகையால் மண் பரிசோதனை இலவசமாகையால் விவசாயிகள் இதை முழுமையாக பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

நம் மாகாணத்தில் இவ்வித மண் பரிசோதனை நிலையங்கள் மூன்று இருக்கின்றன. கோயம்புத்தூர், சேலம், நீலகிரி மாவட்ட விவசாயிகள் பயனடைய கோயம்புத்தூரில் ஒன்றும், தஞ்சாவூர், திருச்சி, தென் ஆற்காடு, வட ஆற்காடு, செங்கல்பட்டு ஜில்லாக்களிலுள்ள விவசாயிகள் பயனடைய தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள ஆடுதுறையில் ஒன்றும், மூன்றாவதாக திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம், கன்யாகுமரி மாவட்ட விவசாயிகளுக்காக திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கோவில்பட்டியில் ஒன்றும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

பஞ்சாயத்து யூனியன்களில் உள்ள விவசாய விஸ்தரிப்பு அலுவலர்களும், கிராம சேவக்குகளும் மண் மாதிரி எடுக்க விவசாயிகளுக்கு உதவுவார்கள். நல்ல மண் மாதிரி எடுக்க விவசாயிகள் இவ்வலுவலர்களின் உதவியை நாடவேண்டும். மாதிரி மண் எடுக்கும்பொழுது மிகுந்த கவனம் தேவை. இல்லையேல் மாதிரி மண்ணை பரிசோதித்தால் தவறான முடிவுக்குக் கொண்டு சேர்க்கும். மற்றும் தவறான சிபாரிசு செய்ய ஏதுவாகும். நல்ல மண் மாதிரியினால் நல்ல பரிசோதனையும் நல்ல சிபாரிசுகளும் கிடைக்கும்.

மண்மாதிரி எவ்வாறு எடுப்பது ?

ஒவ்வொரு நிலமும் ஒரு ‘சாம்பிளிங் யூனிட்டாக’ கருதப்படுகிறது. சில சமயம் ஒரே மாதிரியான தோற்றம் பயிர் விளைச்சல், பண்ணை நிர்வாக முறையிலும் இவைகளைக் கொண்டுள்ள இரண்டு மூன்று நிலங்களை ஒரே சாம்பிளிங் யூனிட்டாக கொள்ளலாம். ஒரே பண்ணையில் தோற்றத்திலும், பயிர் விளைச்சலும் சுண்ணாம்பிடுதல், எருவிடுதல் முதலிய பண்ணை நிர்வாகத்திலும் வேறுபட்டுள்ள பல துண்டு நிலங்களை தனித்தனி யூனிட்டாக கருத வேண்டும்.

நிலத்தின் மேல் இருக்கும் புல் பூண்டுகள் குப்பை இவற்றை எங்காவது ஓரிடத்தில் நன்கு சுரண்டிவிட்டு “ V ” உருவத்தால் மண் வெட்டியால் 6 அங்குல ஆழத்திற்கு குழி வெட்டவும். பின் அக்குழியில் ஒரு பக்கத்தில் அடியிலிருந்து மேல்வரை மண்வெட்டியால் அரை அங்குலத்திற்கு மண்ணை சுரண்டி எடுக்கவும். சுரண்டி எடுத்த மண்ணை ஏதாவது வாளி, தட்டு அல்லது பெரிய பேப்பரில் போடவும். கோணல் மாணலாக நடந்து 10–20 இடங்களில் மண் மாதிரி எடுக்கவும்.

மாதிரி மண்ணிலுள்ள கட்டிகளை உடைக்கவும். பின் கையால் நன்கு கலக்கவும். மண் ஈரமாக இருந்தால் நிழலில் காய வைக்கவும். நேர் சூரிய வெளிச்சத்திலும், செயற்கை உஷ்ணத்திலும் ஒருபோதும் மாதிரி மண்ணை காயவைக்கக்கூடாது.

ஒரு பவுண்டு நன்கு கலந்த மாதிரி மண்ணை ஒரு சுத்தமான துணிப்பையில் போட்டுக் கட்டவும். விவரத்தாளில் தேவையான எல்லா விபரங்களையும் பூர்த்தி செய்யுங்கள். விபரத்தாள் இல்லை என்றால் பின்னால் கொடுக்கப்பட்டிருக்கும் மாதிரி போல் இரண்டு தயாரித்து பூர்த்தி செய்து ஒன்றை மாதிரி மண் போட்ட துணிப்பையிலேயே போட்டு கட்டவும். நிறைய மாதிரி தயாரித்தபின் அவற்றை பஞ்சாயத்து ஆணையாளர் மூலமாகவோ அல்லது நேராகவோ உங்களுக்கு அருகாமையில் உள்ள உதவி இரசாயன நிபுணர் (மண் பரிசோதனை) மண் பரிசோதனை நிலையத்திற்கு மாதிரியைப் பற்றிய எல்லா விவரங்களுடன் அனுப்பி வைக்கவும். மண் பரிசோதனையின் முடிவுகளும் ரசாயன உர சிபாரிசுகளும் சுமார் இரண்டு வருடத்திற்குள் அனுப்பி வைக்கப்படும். உங்கள் பாசனப் பயிருக்கு கிணற்றிலிருந்து நீர் இறைத்தால் அந்த கிணற்று நீரையும் நீங்கள் பரிசோதித்துகொள்வது மிகவும் நல்லது. கிணற்று நீரை சுத்தமான குப்பிகளில் அடைத்து எங்கிருந்து எடுக்கப்பட்டது என்ற விபரத்தையும் எழுதி ஒட்டி அனுப்பவேண்டும். இதைப் பற்றி இன்னும் அதிக விவரங்களுக்கு விவசாயிகள் விவசாய விஸ்தரிப்பு அலுவலரையோ அல்லது கிராம சேவக்கையோ நாடலாம்.

மண் ஒரு புனிதமான பொருள் என்பதை விவசாயிகள் நினைவில் வைக்க வேண்டும். அதிலிருந்துதான் மனித வாழ்க்கையும் உலக வணிகமும் வளர்கின்றன. நாடுசுபீட்சம் பெற நிலம் வளமானதாயிருக்க வேண்டும். வளமில்லா நிலமுள்ள எந்த நாடும் நன்கு வாழ முடியாது. எனவே, உங்கள் நிலவளத்தை சரியான முறையில் பராமரியுங்கள்.

தாவர நோய்களைத் தடுப்பதில் இரசாயன மருந்துகள்

சி. எஸ். கிருட்டிணமூர்த்தி, பி. எஸ்ஸி. (விவசாயம்), பூசண இயல் அறிஞர்,
கா. சிவப்பிரகாசம், பி. எஸ்ஸி. (வேளாண்மை), பூசண இயல் உதவியாளர்,
வேளாண்மைக் கல்லூரி ஆராய்ச்சி நிலையம், கோவை-3.

பயிரில் தோன்றும் நோய்களைக் கட்டுப்படுத்த இரசாயன மருந்துகளைப் பயன்படுத்துவதே சிறந்த முறை. விதைகள் மூலம் பரவும் நோய்களை விதைகளில் மருந்திட்டு மிகக் குறைந்த செலவில் தடுக்கலாம். பயிரில் நோய் தோன்றிய பின் அதைக் கட்டுப்படுத்தவும் இரசாயன மருந்துகள் பெரிதும் பயன்படுகின்றன.

இரசாயன பூசண மருந்துகள் சாதாரணமாக நான்கு பிரிவுகளைச் சேர்ந்தவை. அவை :—

(1) தாமிர வகை (Copper group).

(2) கந்தக வகை (Sulphur group).

(3) பாதரச வகை அல்லது கரிம பாதரச பூசணங் கொல்லிகள் (Mercury group or Organo-mercuric group).

(4) பாதரசம் கலவாத கரிம பூசணங்கொல்லிகள் (Non-mercurial organic group).

1. தாமிர வகை (Copper group).

(அ) **போர்டோ கலவை** (Bordeaux mixture).—தாமிர பூசண மருந்துகளில் இது முக்கியமானது. பெரும்பாலும் ஒரு சதவிகித போர்டோ கலவையே (5 ராத்தல் சுண்ணம்பு, 5 ராத்தல மயில் துத்தம், 50 காலன் தண்ணீர்) உபயோகிக்கப்படுகிறது. பெரும்பாலான நோய்களைத் தடுக்கும் ஆற்றலுடையது. அப்போதைக்கப்போது புதிதாகத் தயாரித்தே பயன்படுத்த வேண்டும். ஆப்பிள், பேர் (Pear) முதலான மரங்களுக்கு போர்டோ கலவையைத் தெளிக்கக்கூடாது.

(ஆ) போர்டோ பசை (Bordeaux paste).—ஒரு இராத்தல் மயில் துத்தத்தையும் ஒரு இராத்தல் சுண்ணும்பினையும் இரண்டு காலன் நீரில் கரைத்தால் இப் பசை கிடைக்கிறது. வெட்டப்பட்ட கிளைகளைப் பாதுகாப்பதற்காக வெட்டுக் காயங்களின் மேல் இப் பசையினைத் தடவ வேண்டும்.

(இ) பர்கண்டி கலவை (Burgundy mixture).—மயில் துத்தம் நான்கு இராத்தலும், சலவை உப்பு (Sodium carbonate) ஐந்து இராத்தலும், 50 காலன் நீரில் கரைக்கப் பட்டுத் தயாரிக்கப்பட்ட கலவையாகும். இது போர்டோ கலவையைப் போன்றே தயாரிக்கப்படுகிறது. நல்ல சுண்ணும்பு கிடைக்காது, போர்டோ கலவை தயாரிக்க முடியாத சூழ்நிலையில் மட்டுமே இதனை உபயோகிப்பது சிறந்தது. பர்கண்டி கலவையைவிட போர்டோ கலவையே சிறந்தது.

(ஈ) செஷன்ட் காம்பவுண்டு (Cheshunt Compound).—இதில் மயில் துத்தம் இரண்டு பங்கும், அமோனியம் கார்பனேட் 11 பங்கும் அடங்கியுள்ளது. இவற்றைத் தனித்தனியாகப் பொடியாக்கிப் பின் இரண்டையும் கலந்து, 24 மணி நேரம் காற்றுப்புகாத பாட்டில்களில் அடைத்து வைத்திருந்த பின்பே உபயோகிக்க வேண்டும். மண்ணின் மூலம் பரவும் பூசணங்களை அழிக்க இரண்டு காலன் தண்ணீரில் 1 அவுன்சு மருந்து வீதம் கரைத்துத் தரையை நனைக்க (Drenching) வேண்டும்.

(உ) கொலாய்டல் காப்பர் (Colloidal copper).—இதனைத் தயாரித்த பின், இரண்டு மூன்று மாதங்கள் வரை சேமித்து வைக்க இயலுமாதலால், இவ்விதத்தில் போர்டோ கலவையை விடச் சிறந்ததாகும். ஐந்து அவுன்ஸ் சலவை உப்பினை (Caustic soda) மூன்று பைன்ட் நீரிலும், ஒரு இராத்தல் மயில் துத்தம், ஒரு பைன்ட் மொலாசஸ் இவற்றை நான்கு பைன்ட் நீரிலும் கரைத்துப்பின் ஒன்றுகக் கலக்க வேண்டும். இந்தக் கலவையை தேவையான தண்ணீருடன் கலந்து உபயோகிக்க வேண்டும்.

(ஊ) கரையாத அல்லது நிலைத்த தாமிரம் (Insoluble or fixed copper).—தாமிரத்தால் செடிகளுக்கு ஏற்படும் தீங்கை (Injury) தவிர்ப்பதற்கும், கலவைகளைத் தயாரிப்பதில் ஏற்படும் தொல்லைகளை நீக்கவும் தற்பொழுது பல தாமிரக் கூட்டு மருந்துகள் (Copper

Phone : 24558, 34251, 63746.
Grams : 'VENPALCO'

விவசாய பெருமக்களுக்கு வேண்டுகோள்

குறைந்த உழைப்பில்
நிறைந்த ஊதியத்தை
உழவர்களுக்கு தருவது

கஜலக்ஷ்மி கலப்பு உரமும்

ராமன்ஸ் நவீன விவசாயக் கருவிகளும்

தயாரிப்பாளர் :

வி. வேணுகோபால் பிள்ளை & கோ.
ராமன்ஸ் எஞ்ஜினியரிங் ஒர்க்ஸ்

தலைமை ஆபீஸ் :
நெ. 2/27, பிராட்வே, சென்னை-1

கிளைகள் :

1. நெ. 36, ஆசூரித் தெரு, திருவள்ளூர்
2. நெ. 14-F, பழைய பண்ருட்டி சாலை, விழுப்புரம்
3. நெ. 55, ஹபீப் பஜார், ரெட்யில்ஸ், சென்னை-52.

மற்றும் எல்லா ஊர்களிலும் உள்ள எங்கள் ஏஜெண்டுகளிடமும் கிடைக்கும்.

ஒருமுறை உபயோகித்தால் சிறப்பு தெரியும்

விற்பனை ஏஜெண்டுகள் தேவை

compounds) எங்கும் கிடைக்கின்றன. இவைகள் குப்ராவிட் (Cupravit), காப்பசான் (Coppesan), ஷெல்காப்பர் (Shell copper), வெட்கால் (Wetcol), குப்ரோகில்ட் (Cuprokylt), பிலிடாக்ஸ் (Blitox), பெரனுக்ஸ் (Peronox), ஃபங்கி காப்பர் (Fungi copper), காப்பர் சாண்டோஸ் (Copper sandoz), மற்றும் ஜீனப் (Zineb) முதலான வியாபாரப் பெயர்களில் கிடைக்கின்றன. இவைகளை சுண்ணும்பு சேர்க்காமல் அவ்வாறே உபயோகிக்கலாம். சில குறிப்பிட்ட நோய்களை சிறந்த முறையில் கட்டுப்படுத்துகின்றன.

தெளிக்கும் மருந்துகளைத் தயார் செய்யும்போது முதலில் சிறிதளவு மருந்தினை நீரில் கரைத்துக்கொண்டு பின்பு தேவையான தண்ணீர் கலக்கவேண்டும். சாதாரணமாகப் பயிரின் வயதுக்கும் நோயின் கடுமைக்கும் தக்கவாறு சுமார் 2 முதல் 5 இராத்தல் மருந்தினை 100 காலன் நீரில் கரைத்து உபயோகிக்கலாம்.

2. கந்தக வகை (Sulphur group)

(அ) கந்தகத் தூள் (Sulphur dust).—விதைகளில் கந்தகத் தூளைக் கலந்து, விதைகளின் மூலம் பரவும் சோளம் கரிப்பூட்டை (Grain smut) நோயினைத் தடுக்கலாம். கந்தகத் தூளைத் தூவி சாம்பல் நோய்களையும் (Powdery mildews) கட்டுப்படுத்தலாம்.

(ஆ) சுண்ணும்பு கலந்த கந்தகம் (Lime sulphur).—ஆப்பிள், பீச் முதலான மரங்களுக்கு இதனைப் பயன்படுத்தலாம். இது 100 இராத்தல் கந்தகமும், 50 இராத்தல் சுண்ணும்பும், 100 காலன் தண்ணீரும் கலந்து தயாரிக்கப்படுகிறது. நீற்ற சுண்ணும்பையும் (slaked lime) கந்தகத்தையும் சேர்த்து நீரில் கொதிக்கவைத்துப் படியவைக்க வேண்டும். மேலே தேங்கி நிற்கும் திரவத்தை எடுத்து தேவையான அளவு நீரில் கலந்து பயன்படுத்தலாம்.

(இ) நீரில் கரையும் கந்தகம் (Wettable sulphur).—சுண்ணும்பு கலந்த கந்தகத்தைத் தயாரிக்கும் முறை கடினமானதோடு, சரியான முறையில் தயாரிக்கப்படவில்லையாயின் இலைகளுக்கு ஊறு செய்யும் இயல்புடையது. இதனை ஈடு செய்யும் பொருட்டு, சோஃப்ரில் (Soffril), அல்ட்ராசல்பர் (Ultrasulphur), சூபர்சல் (Supersul), ஃபெர்னுசல் (Fernasul), தியோவிட் (Thiovit), சோல்பார் (solbar) முதலான நீரில் கரையும் கந்தக மருந்துகள் விற்பனைக்கு வந்துள்ளன. இவைகளை முதலில் பசையாக்கிக்கொண்டு பின்பு குறிப்பிட்டளவு நீரில் கரைத்து உபயோகிக்க வேண்டும்.

3. கரிம பாதரச பூசணங் கொல்லிகள் (Organo-mercuric fungicides).

தானியவகை, பருப்புவகை, பருத்தி முதலிய பயிரில் விதைகளின் மூலம் பரவும் நோய்களைத் தடுப்பதற்காக, விதைகளில் பாதரச மருந்துத் தூள்களைக் கலந்து விதைக்கலாம். அக்ரசான் ஜி. என். (Agrosan G. N.), செரசான் (Ceresan), கிரானேசான் (Granosan), செர்மிசான் (Germisan), அக்ரானே (Agrano), லெய்டோசான் (Leytosan), பேனேஜன் (Penogen), அரிடான் (Aretan), செர்டோசான்(Certosan), ஹார்வசான் (Harvsan) டில்லெக்ஸ் (Tillex) முதலான வியாபாரப் பெயர்களில் தூள் மருந்துகள் கிடைக்கின்றன. நீரில் கரையும் செரசான் (Wet ceresan) மருந்தால் தரையை நனைத்து மண்ணின் மூலம் பரவும் நோய்களைத் தடுக்கலாம்.

4. பாதரசம் கலவாத கரிம் பூசணங் கொல்லிகள் (Non-mercurial organic fungicides)

பாதரச மருந்துகள் மிகவும் நஞ்சுள்ளவையாதலால் காய்கறி விதைகளில் கலந்து பயன்படுத்துவதற்கு• பாதரசம் கலவாத பூசண மருந்துகளே பயன்படுகின்றன.

(அ) டைதயோகார்பமேட்ஸ் (Dithiocarbomates).—இவை குறைந்த காலத்திற்கே செடிகளில் தங்குவதால் இவற்றை நோயின் கடுமைக்குத் தக்கவாறு அடிக்கடி தெளிக்க வேண்டும். டைத்தேன் Z 78 (Dithane Z. 78), டைத்தேன் டி. 14 (Dithane D. 14), ஜெர்லெட் அல்லது ஜிராம் (Zerlate or Ziram), ஃபெர்மேட் அல்லது ஃபெர்பாம் (Fermate or Ferbam) போன்றவை இப்பிரிவைச் சேர்ந்தவை.

(ஆ) குளோரினேடட் குயினேன்ஸ், நாப்தோ குயினேன்ஸ் (Chlorinated quinones and Naphthoquinones), ஸ்பெர்கான் (Spergon), பைகான் (Phygon) போன்றவை இப்பிரிவில் அடங்கியுள்ளன. இவைகளை விதைகளில் கலந்து விதைப்பதன் மூலம் விதைகளின் மூலம் பரவும் நோய்களைத் தடுக்கலாம்.

ஸ்ரீ முருகன்
தமிழ்நாடு குடிசைத் தொழிற்கூடம்.
44, வடக்கு ரத வீதி, சீர்காழி
(தஞ்சை மாவட்டம்)
(அரசினரால் பதிவு செய்யப்பட்டது.)

கைதேர்ந்த அனுபவமிக்க தொழிலாளர்களால் நீண்டகால உழைப்புக்கு ஏற்ற உறுதியான நவீன விவசாய கருவிகளை நேர்த்தியாக தயாரித்து சகாயமான விலையில் அளிக்கின்றோம். குறைந்த உழைப்பில நிறைந்த உழவு சிக்கனம், உழும் காளைகளும் எளிதில் சோர்வு அடையாது. விவசாய இலாகா, வட்டார வளர்ச்சி அலுவலகங்கள், கூட்டுறவு விவசாய சங்கங்கள், ஜப்பல்பூர் விவசாய ஆராய்ச்சியாளர்களால் எங்கள் கருவிகள் பாராட்டப் பட்டுள்ளதால் உங்களுக்கு இலாபமே.

எமது தயாரிப்புகள் :—(1) மேலூர் கலப்பைகள், (2) இரும்புக் கலப்பைகள், (3) தழை அமுக்கும் செட்டூன்கள், (4) களை எடுக்கும் கருவி, (5) வரப்புக் கட்டும் கருவி, (6) பரம்புப் பலகை, (7) மண் வெட்டி வகைகள், (8) கொழு வகைகள், (9) தேன் பிழியும் கருவி, (10) சேறு கலக்கும் பட்லர்கள், (11) முளை பரிசோதனைத் தட்டுகள் (12) விதைகளுக்கு மருந்து கலக்கும் ட்ரம்.

S. சாமிநாதன்,
உரிமையாளர்.

ஆரஞ்சில் தோன்றும் நோய்களும் அவைகளைத் தடுக்கும் முறைகளும்

[பூ. பாலின் கொர்நேலியஸ், பி. எஸ்ஸி, (எஜி.), உதவியாளர், பயிர் பாதுகாப்பு அலுவலகம், கோவை.]

ஆரஞ்சில் காணும் முக்கியமான நோய்கள்

(1) சுள்ளி தட்டல் (Die-back)

இந்நோய் ஒருவகைப் பூஞ்சணத்தால் (Colletotrichum gloesporoides) உண்டாகிறது. நோய் கண்டவுடன் முதலில் அதன் இலைகள் உதிர ஆரம்பிக்கும். பிறகு அதிகப்படியான கிளைகள் நுனியிலிருந்து கீழாக வாடும். இக்கிளைகளில் மிகச்சிறிய கரும்புள்ளிகள் தோன்றும். சில வேளைகளில் ஆரஞ்சு பழத்தில் குழிவான மண்ணிறப் புள்ளிகள் காணப்படும். செழுமையற்ற மரங்களை நோய் எளிதில் தாக்கும். எனவே ஆரஞ்சு மரம் செழித்து இருக்க அதற்குப் போதிய உரமும் நீரும் அவசியம்.

தடுப்பு முறை

* தாக்கப்பட்ட ஆரஞ்சின் வாடிய கிளைகளை முதலில் கத்தரித்து பிறகு வெட்டிய பாகத்தில் போர்டோ பசை தடவவும்.

* பிறகு துத்தநாகம், மயில்துத்தம், சுண்ணும்பு ஆகியவற்றை 3 : 1 : 2½ என்ற விகிதத்தில் 50 காலன் தண்ணீரோடு கலந்து தெளிக்கவும்.

(2) சாம்பல் நோய் (Powdery mildew)

இதுவும் ஒருவகை பூஞ்சணத்தால் ஏற்படுகிறது. பொதுவாக குடகு ஆரஞ்சையும் சாத்துக்குடியையும் அதிகமாகத் தாக்குகிறது. இலைகள், இளங்குருத்துக்கள், இளங் கிளைகள், பிஞ்சுகள் ஆகியவற்றின் மீது வெள்ளை நிறப் பொடி ஒன்று படிந்ததுபோல் காணப்படும். நோயினுல் தாக்கப்பட்ட இலை பொதுவாக வளருவதில்லை. உருவம் மாறி, காய்ந்து உதிர்ந்துவிடும். பிஞ்சுகள் உதிர்ந்துவிடும். இதனுல் மகசூல் மிகவும் குறையும்.

தடுப்பு முறை

* கந்தகத்தூளை நோயின் வீரியத்திற்குத் தகுந்தபடி பலமுறை தூவவும்.

* அல்லது நீரில் கரையும் கந்தகம் (wettable sulphur) அல்லது சுண்ணும்பு கந்தகத்தை (Lime sulphur) உபயோகிக்கவும்.

(3) புகைப்படல நோய் (sooty mould)

பொதுவாக, செதிள், அசுவினி போன்ற பூச்சிகள் (scales and Aphids) ஆரஞ்சைத் தாக்கும்போது இப் பூஞ்சண நோயும் காணப்படும். இப்பூச்சிகளிலிருந்து உண்டாகும் தேன் போன்ற ஒரு பொருளை இப்பூஞ்சணம் (capnodium sp) உண்டு வாழ்கிறது. நோய் கண்ட மரத்தில் ஒருவித கருநிறப் பொடி, புகைபோல இலைகள் கிளைகள் மீது படர்ந்து இருக்கும். இதனுல் இலைகளுக்கு போதிய சூரிய வெளிச்சம் கிடைப்பதில்லை. ஆரஞ்சுச்செடி சத்திழந்துவிடும்; பழங்களும் பெரிதாவதில்லை.

தடுப்பு முறை

* இப்பூச்சிகளையும், நோயையும் கட்டுப்படுத்த பாலிடாலை கஞ்சியோடு (Starch) கலந்து தெளிக்கவும், அல்லது 5 ராத்தல் மீன் எண்ணெய் சோப் (Fish oil rosin soap) அல்லது எச். இ. டி. பி. (H.E.T.P.) என்னும் மருந்தை 5 அல்லது 6 ராத்தல் கஞ்சியோடு 100 காலன் தண்ணீரில் கலந்தும் தெளிக்கவும். மருந்தும் புகைபோல படர்ந்திருக்கும் பூஞ்சணமும் சேர்ந்து காய்ந்து ஏடு ஏடாகப் பெயர்ந்து வந்துவிடும்.

(4) புற்றுநோய் (cancer)

இந்நோய் ஒருவித கிருமியினுல் (Xanthomonas citri) உண்டாகிறது. பொதுவாக மந்தாரமாக உள்ள வானிலை இந்நோய் பரவ சாதகமாக இருக்கிறது. ஆரஞ்சிலும், எலுமிச்சையிலும் இந்நோய் ஆண்டு முழுவதும் காணப்படுகிறது. நோயுற்ற மரத்தின் இலைகள், கிளைகள், பழங்கள் ஆகியவற்றின்மீது தக்கையாலானது போன்ற கொப்புளங்கள் காணப்படும். நாட்கள் செல்லச் செல்ல இவை ஒன்று சேர்ந்துவிடும். இவ்வாறு பாதிக்கப்பட்ட பழங்கள் தரம் கெட்டு விற்பனைக்கு உதவாமல் போகின்றன.

தடுப்பு முறை

* தக்கைபோன்ற கொப்புளம் உள்ள குச்சிகளையும், கிளைகளையும் கத்தரித்து எரித்துவிடவும்.

* பிறகு ஒரு சதவீத போர்டோ கலவை, தாமிர மருந்து அல்லது சுண்ணும்பு கந்தகம் (Lime Sulphur) போன்ற பூஞ்சண நாசினியை இரண்டு மாதத்திற்கு ஒரு தடவையாக மரத்தின் எல்லா பாகங்களிலும் படும்படி தெளிக்கவும்.

* மந்தாரமான சீதோஷ்ண நிலை காணப்படும்போது பூஞ்சண நாசினியை அடிக்கடி தெளித்தல் நல்லது.

(5) துத்தநாகப் பற்றுக்குறை நோய் (Foliocellosis or zinc deficiency)

ஆரஞ்சுக்கு வேண்டிய முக்கியமான மூலகப் பொருட்களில் ஒன்றுன துத்தநாகம் போதிய அளவில் மரத்திற்குக் கிடைக்காதபோது இந்நோய் உண்டாகிறது. இலையின் நரம்புகள் மட்டும் பச்சையாகவும் இலையின் மற்ற பகுதிகள் இளம்பச்சையாகவும் மாறுதல், இலைகள் கரடு முரடாக மாறுதல், மேலும் நோய் அதிகமாகக் காணப்

படும்போது இலைகள் குறுகி சிறியதாக மாறுதல், கிளைகள் நெருக்கமாக வளர்வதால் அடர்த்தியாகி, வளர்ச்சி குன்றி விடுதல், கிளைகள் நுனியிலிருந்து காய்ந்து வருதல், பழங்கள் சிறுத்து இளம் மஞ்சள் நிறமடைதல், பழங்களின் மேற்பகுதி கரடுமுரடாக மாறுதல், சிலவேளைகளில் காய் பிடிக்காமலிருத்தல் ஆகியவை நோயின் அறிகுறிகளாகும்.

தடுப்பு முறை

* துத்தநாகம் போதிய அளவில் கிடைக்கும்படி செய்தால் ஆரஞ்சு மரம் செழித்து வளர்ந்து நல்ல பலன் தரும். நோயின் அறிகுறிகளைக் கண்டவுடன் துத்த நாகம், சுண்ணாம்பு கந்தகத்தை ஆண்டுக்கு இருமுறையாக தெளிக்கவும்.

* நோயின் வீரியம் குறைவாக இருக்கும்போது 5 ராத்தல் துத்தநாகம், 2½ ராத்தல் சுண்ணாம்பு ஆகியவற்றை 100 காலன் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

* இந்நோய் அதிகமாகக் காணப்படும்போது 10 ராத்தல் துத்தநாகத்தையும் 5 ராத்தல் சுண்ணாம்பையும் 100 காலன் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

* ஆரஞ்சு மரம், இளம் இலைகளுடன் துளிர்த்து இருக்கும்போது இம்மருந்தைத் தெளித்தல் அவசியம்.

* மேலும் அதிகமாகக் குப்பை உரம் போடுவதும் அவசியம்.

(6) இலை உதிர்தல்—பழம் அழுகல் (leaf-fall and fruit rot)

இந்த நோயும் ஒருவகை பூஞ்சணத்தால் (Phytophthora palmivora) ஏற்படுகிறது. குடகு ஆரஞ்சை அதிகமாகத் தாக்குகிறது. ஜூன்–ஜூலை மாதம் முதல் அக்டோபர்—நவம்பர் மாதம் வரை இந்நோய் காணப்படுகிறது.

ஆரம்பத்தில் இலைகளில் நீர்க் கோத்த வட்டப்புள்ளிகள் உண்டாகும். பிறகு இவை கனத்து அழுகத் தொடங்கி இலை முழுவதும் பரவும். மெதுவாக இளங்கிளைகள், பழங்கள், மரப்பட்டைகள், குருத்துகள் ஆகியவற்றையும் இந்நோய் தாக்கும். இலைகள் உதிர்ந்து விடும். அதனால் மரம் மொட்டையாகி விடும். இளங்குச்சிகள் அழுகிக் காய்ந்து விடும். தாக்கப்பட்ட பழங்கள் விரைவில் அழுகி விழுந்து விடும். இளம் பிஞ்சுகள் முதல் பழுத்த பழங்கள் வரை இவ்வாறு உதிர்ந்து விடுவதால் பெருத்த நஷ்டம் ஏற்படுகிறது. மேலும் மரப்பட்டைகளும் குருத்துக்களும் அழுகத் தொடங்கும்.

தடுப்பு முறை

* ஒரு சதவீத போர்டோ கலவையை (பருவமழைக்கு முன்) மே மாதக் கடைசியில் ஓர் முறையும், ஆகஸ்டு மாதத்தில், (பருவ மழை துவக்கத்தில்) மறுமுறையுமாக ஒவ்வொரு ஆண்டும் தெளிக்கவும்.

* மருந்து தெளிக்கும்போது இலை, இளங்குச்சிகள், பழங்கள் முழுவதிலும் நன்கு படும்படி தெளித்தல் அவசியம்.

(7) பசை வடிதல் (Gummosis)

பழம் அழுகல் நோய்க்குக் காரணமான பூஞ்சணமே 'பசை வடிதல்' என்னும் நோய்க்கும் காரணம். சாத்துக்குடியில் இந்த நோய் அதிகமாகக் காணப்படுகிறது. முதலில் அடிமரமே தாக்கப்படுவதால் அதன் மரப்பட்டைகள் உரிந்து வரும். மேலும் அடி மரத்தில் நில மட்டத்திற்கு சற்று மேலிருந்து ஒரு வித பசை கசிந்து வெளியே வடியும். இந்நோய் மெதுவாக பட்டைக்கு அடியிலிருக்கும் மரத்தையும் ஆணிவேரையும் தாக்குவதால் நாளடைவில் மரம் பட்டுவிடும். சிறிய செடி முதல் பெரிய மரம் வரை இந்நோயினால் தாக்கப்படுகிறது.

தடுப்பு முறை

* ஈரப் பசையுள்ள சூழ்நிலை நோய்க்கு மிகவும் சாதகமானது. ஆதலால் அடிமரத்தைச் சுற்றியும் வேர்ப் பாகத்திலும் தண்ணீரைத் தேங்கவிடாமல் வடித்துவிடவும்.

* அடிமரத்தைச் சுற்றியுள்ள மண் எப்போதும் ஈரமாக இருக்கக்கூடாது.

* களை எடுத்துக் கொத்திவிடும்போது அடிமரத்திற்கோ வேர்களுக்கோ காயம் உண்டாக்கக்கூடாது. அவ்வாறு காயம் ஏற்பட்டால் அதன் மூலம் பூஞ்சணம் மரத்திற்குள் சென்று விடும்.

* மேலும் அடிமரத்தின் மீது குப்பை கூளங்களைக் கூட்டி வைக்கக்கூடாது.

* நோயுற்ற மரத்தின் பட்ட வேர்களை அப்புறப்படுத்தவும்.

* மரத்தின் அடிபாகத்திலுள்ள மண்ணைத் தோண்டி எடுத்து விட்டு புதிய மணலால் நிரப்பவும்.

* நோயினால் பாதிக்கப்பட்ட மரப்பட்டையோடு நோயற்ற மரத்தின் உள்பாகத்தையும் சேர்த்து செதுக்கி எடுத்துவிட்டு, அந்த இடத்தில் துத்தநாகம், மயில்துத்தம், சுண்ணாம்பு (lime wash) ஆகியவற்றை 3 : 1 : 2½ என்ற விகிதத்தில் 50 காலன் தண்ணீரில் கலந்து போடவும். போர்டோ களிம்பையும் பூசலாம்.

* அடிமரத்தின் சுற்றளவில் பாதிக்கு மேற்பட்ட பாகம் இந்நோயினால் தாக்கப்பட்டால் மரத்தை வெட்டிவிடுவது நல்லது.

ஆரஞ்சில் காணப்படும் கிளை உலரும் நோய், துத்த நாகப் பற்றுக்குறை நோய், மற்றும் இதர பற்றுக்குறை

[18-ம் பக்கம் பார்க்கவும்]

"நம் தலைமுறையின் மாபெரும் மனிதரின் அவா, வறுமைப் பிணியை அகற்றி மக்களை மகிழ்விக்க வேண்டும் என்பதே. நம் சக்திக்கு இது அப்பாற்பட்டதாக இருக்கலாம். ஆனால் மக்கள் வறுமைப் பிணியினால் அவதிப்படும் வரை, நம் பணி முடிந்துவிட்டதாக எண்ணக்கூடாது. ஆகவே நாம் கடுமையாக உழைக்கவேண்டும். நம் கனவுகள் நனவாக ஆகும்வரை உழைக்க வேண்டும்"

— ஜவஹர்லால் நேரு

வறுமைப் பிணியை அகற்றி மக்களை மகிழ்விப்போம்..

"நம் எதிர் உள்ள இந்த மாபெரும் பணிக்கு நாம் யாரும் அடி பணிவோம். சுதந்திர இந்தியா, சுபிக்ஷ இந்தியா, வலிமையான இந்தியா, சண்டை இல்லாமல் சமாதான உலகம். இவைகளே காந்திஜிக்கும், ஜவாஹர்லாலுக்கும் நாம் அமைக்கும் சரியான ஞாபகார்த்தங்கள்."

— லால் பஹதூர் சாஸ்திரி

நமது எண்ணம் தெளிவானது — யாவருக்கும் நல்வாழ்வு அளிப்பதுதான்,
இதை அடைய வறுமைக்கும், வேலையில்லாமைக்கும் முடிவு கட்ட வேண்டும்
யாவருக்கும் உணவு, உடை, உறைவிடம் கிடைக்கச செய்ய வேண்டும்.
இந்த சோஷலிஸ பாதையை நோக்கி நாம் யாவரும் முன்னேறுவோம்.
ஒழுங்கு முறையும், ஒருமித்த செயலுமே இன்றைய சவாலுக்கு சரியான பதில்.

ஜெய்ஹிந்த்

ஒற்றுமையை வளர்ப்போம் . உறுதியுடன் உழைப்போம்

DA 64/150

தென்னந்தோப்பில் எலித் தொல்லை !

[வெ. ர. வரதராசன், பி. எஸ்ஸி. (விவ.), தென்னை வளர்ச்சி உதவியாளர், தென்னை தீவிர உற்பத்தித் திட்டம், அதிராம்பட்டினம்.]

இந்தியாவில் சுமார் 230 கோடி எலிகள் இருக்கின்றன, என்று உத்தேசமாக கணக்கெடுத்திருக்கின்றனர்கள். இவைகள் பயிர்களுக்கும், பண்டங்களுக்கும் பெரும் சேதம் விளைவிக்கின்றன.

தென்னந் தோப்புகளில் எலிகளால் சில சமயம் அதிக சேதம் ஏற்படும். எலிகள் வரப்புகளில் வளை தோண்டி வசித்து இரவில் தங்களுடைய கூறிய நகங்களின் உதவியால் மரங்களில் பற்றியேறி இளந் தேங்காய்களைத் துளை போட்டுவிடும். இப்படி துளையாக்கப்பட்ட தேங்காய்கள் மரத்தினின்று விழுந்து விடுகின்றன.

நல்ல இடைவெளி உள்ள தோப்பைவிட மரங்கள் நெருக்கமாயுள்ள தோப்பில் எலிகளின் தொல்லை அதிகமாக உள்ளது. காரணம் நெருங்கி நடப்பட்ட தோப்புகளில் ஒரு மரத்தின் மட்டை மற்றொரு மரத்தின் மட்டையின் மேல் தொட்டுக்கொண்டு இருக்குமாதலால் எலிகள் ஒரு மரத்திலிருந்து மற்றொரு மரத்திற்குச் சுலபமாகத் தாவ ஏதுவாகிறது. ஆகவே குறைந்தது 25 அடியாவது இடைவெளி விடவேண்டும்.

எலிகளைக் கொல்ல "ஜிங்க் பாஸ்பைடு" "பேரியம் கார்போனேட்", "ஆர்சினிக்". "ஸ்டிக்னைன்" போன்ற இரசாயன நஞ்சுகளை தீனியில் கலந்து வைக்கவும். "ஜிங்க் பாஸ்பைடு" மருந்தில் ஒரு பாகத்தை 19 பாக உணவுப் பொருளுடன் (பொறி, சாதம் அல்லது வறுத்த வெங்காயம்) கலந்து வளைகளின் அருகில் வைப்பதன் மூலம், எலிகள் இவற்றை உண்டு மடிகின்றன. எலிப் பொறிகளையும் உபயோகிக்கலாம். தகரம் அல்லது துத்தநாகத் தகடுகளை மரத்தின்மீது தடையாக வைத்து எலிகளை மரத்தின் மேல் ஏறுவண்ணம் தடுக்கலாம்.

மேற்கூறிய முறைகளைக் கையாண்டு எலித் தொல்லையை ஒழித்து தேங்காய் விளைவைப் பெருக்குங்கள்.

[16-ம் பக்கம்—தொடர்ச்சி]

நோய்களையும் தடுகக கீழ்க்கண்டவைகளை சேர்த்து ஒரு கலவையாக்கி "டானிக் மருந்தாக" தெளித்தால் நல்ல பயன் அடையலாம்.

உர டானிக் மருந்து (Manurial tonic mixture)

1.	மயில் துத்தம்	3	ராத்தல்
2.	துத்தநாகம்	5	,,
3.	மகனீசியம் சல்பேட்	2	,,
4.	மங்கனீசு சல்பேட்	2	,,
5.	போராக்ஸ்	1	,,
6.	பொரஸ் சல்பேட்	2	,,
7.	யூரியா	2	,,
8.	சுண்ணாம்பு	9	,,
9.	தண்ணீர்	100	காலன்
10.	நீரில் கரையும் கந்தகம்	5	ராத்தல்

இந்தக் கலவையை, ஆரஞ்சு மரம் இளம் இலைகளுடன் துளிர்விட்டு வரும்போது தெளிக்க வேண்டும். வயதுக்குத் தகுந்தபடி மரத்திற்கு $1\frac{1}{2}$ காலன் முதல் 2 காலன் வரை தெளிப்பது அவசியம்.

ஆரஞ்சுத் தோட்டங்களினின்றும் குன்றாத மகசூல் எடுக்க அவற்றிற்கு போதிய எருவிட்டு, நீர்பாசனமும் அளிப்பது அவசியம். தக்க காலத்தில் பயிர் பாதுகாப்பு முறைகளையும் கையாள வேண்டும்.

மண் ஈரம்—

கோடை காலத்தில் ஆரஞ்சுக்குப் போதிய தண்ணீர் கிடைப்பதில்லை. கோடையில் நீர்ப்பாசனம் அளிக்க வசதியில்லாவிட்டாலும் நிலத்திலிருக்கும் சிறிது ஈரத்தையாவது வறண்டு விடாமல் பாதுகாப்பது அவசியம். இதற்கு நவம்பர் மாதம் முதல் மே மாதம் வரை காய்ந்த சருகு, புல் அல்லது மரங்களின் இலைகள் ஆகியவற்றை மரங்களுக்கு அடியில் பரப்ப வேண்டும்.

எரு விடுதல்.—ஆரஞ்சுக்குப் போதிய உரம் அளிக்காவிட்டால் இலைகள் பழுத்து சுருங்கி விடும். இந்நிலை ஏற்படாது ஆரஞ்சு தோட்டங்களுக்கு கீழ்க்கண்ட அளவு ஆண்டொன்றுக்கு உரங்கள் இடவேண்டும்.

எக்கருக்கு .. .. 10 டன் தொழு எரு
மரம் ஒன்றுக்கு சி. ஏ. என்.

அல்லது

அமோனியம் சல்பேட்.	$2\frac{1}{2}$	ராத்தல்.
சூப்பர் பாஸ்பேட்	6	ராத்தல்.
மியூரியேட் ஆ.·.ப் பொட்டாஷ்	$2\frac{1}{2}$	ராத்தல்.

5 அல்லது 6 ஆண்டுகளுக்கொரு முறை 15 ராத்தல் சுண்ணாம்பு இடவும்.

உங்கள் நெற்பயிருக்கு

போட்டாஷ்

K_2O

(நைட்ரஜன்
பாஸ்பரிக்
அமிலத்துடன்)
உபயோகியுங்கள்

பொட்டாஷ் உங்கள் நெற் பயிரின்
உரத்தையும், தரத்தையும் உயர்த்துகிறது
பொட்டாஷ் சிகப்பாகாமல் தடுக்கும்.
பொட்டாஷ் நோய் நொடிகளை எதிர்த்து
நிற்க வலுவூட்டுகிறது.
பொட்டாஷ் பதரைக் குறைத்து,
பயிர் விளைச்சலைப் பெரிதும்
அதிகரிக்கிறது.

சகஜமான
எருவுடன் ஏக்கராவுக்கு
25 கிலோ வரை
பொட்டாஷ் ம்யூரியேட்
உபயோகியுங்கள்.

பொட்டாஷ்
மலிவானது - 25 கிலோ
பொட்டாஷ் ம்யூரியேட்
விலை 8 ரூபாய்க்கும்
குறைவானது.
பொட்டாஷ்
உபயோகியுங்கள்.
அதிக வருமானம்
பெறுங்கள்.

உங்கள் உர வியாபாரியிடம்
கேட்கவும். அல்லது
இந்த மூகவரிக்கு எழுதவும்:

இந்தியன் பொட்டாஷ் சப்ளை ஏஜென்ஸி லிமிடெட்

8/9, தம்பு செட்டித் தெரு. த. பெ. நெ. 14, சென்னை-1

IPG 2 TMa

காட்டுக் கண்டங்கத்தரி, ஒரு கொடிய களை ! அழிப்பதெப்படி ?

(எம். பாலசுப்ரமணியன், தாவர நூல் பிரிவு, வேளாண் கல்லூரி, கோயமுத்தூர்.)

காட்டுக் கண்டங்கத்தரி (Solanum elaegnifolium) ஒரு புது வகையான களை. இப்போது கோவை மாவட்டத்தில் மிகவும் வேகமாகப் பரவிக் கொண்டிருக்கிறது. இது அமெரிக்க நாட்டிலிருந்து இங்கு பரவியுள்ளது. கடந்த பத்து, பன்னிரண்டு ஆண்டுகளாக இச்செடி கோவை மாவட்டத்தில் காணப்படினும், சென்ற நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளில்தான் இது விரைவாகப் பரவி, பயிரை நாசம் செய்து வருகிறது.

களையின் தோற்றமும் பரவும் விதமும்.

* கோரை மற்றும் அருகம்புல்லைப் போல் இதுவும் பூமிக்கடியிலுள்ள வேர்களின் மூலமாக எளிதில் தழைக்கிறது.

* வேரின் சிறு துண்டுகள் கூட புதிய செடி ஒன்றை விரைவில் உண்டாக்கிவிடும்.

* களை எடுக்கும்போது நம்மையறியாமல் வேரை துண்டித்து விட்டால், அவ்வாறு வெட்டப்பட்ட ஒவ்வொரு சிறு துண்டும் புதிய செடிகளாகி களையை வெகுவாகப் பெருக்கிவிடும்.

* காட்டுக் கண்டங்கத்தரி நீண்ட காலத்திற்கு வாழும் பல்லாண்டுப் பயிரினத்தைச் சார்ந்தது.

* இதன் வேர் பூமிக்கடியில் மூன்று முதல் எட்டு அடி வரை ஆழமாகப் பாயக் கூடியது. கிட்டத்தட்ட இரண்டடி அளவுக்குச் சுற்றிலும் பரவும் தன்மையுடையது.

* ஆகவேதான், இதை எளிதில் அழிப்பது கடினம்.

* காட்டுக் கண்டங்கத்தரி புஞ்சை, மற்றும் தோட்டக்கால்களில் நன்கு பரவக் கூடியது.

* தண்ணீர் வசதியுள்ள இடங்களில் தழைத்து வளரும்.

* பருத்தி, ராகி, கரும்பு, புகையிலை, கோதுமை பயிராக்கப்பட்ட நிலங்களில் செழித்து வளரும்.

* வயல்களில் நெல் நடப்பட்டுள்ள இடங்கள் தவிர, வரப்புகளில் மட்டுமே தோன்றுகிறது.

* வயல் மறுபடியும் தரிசாகக் கிடந்ததாலோ, தோட்டக்காலாக மாற்றப்பட்டாலோ, இந்தச் செடி நன்றாக வளர ஆரம்பித்து பூமி முழுவதும் பரவி விடும் தன்மை வாய்ந்தது.

* ஆகவே நீரைத் தேக்கி வைத்திருந்தாலும் இக்களையை அழிக்க முடியாது.

காட்டுக் கண்டங்கத்தரி சுமார் இரண்டடி உயரம் வளரும். தண்டு, இலை மற்றும் காய்களின் மேல் சிறு முட்கள் நிறைந்திருக்கும். இதன் இலைகள் சாம்பல் பூத்த இளம் பச்சை நிறமுடையவை. பூக்கள் கத்திரிப் பூவை நிகர்க்கும். ஆயினும் மிகவும் குறைவாகவே காணப்படும். காய்கள் பழுத்தால் மஞ்சள் நிறமாக சுண்டைக்காயைவிடச் சற்றுப் பெரியதாக இருக்கும்.

களையை அழிக்கும் முறைகள்.

* மாற்றுப் பயிர் முறைகளைக் கையாண்டு களைக் கொல்லிகளையும் பயன்படுத்தினால்தான் இக்களையைக் கட்டுப்படுத்தலாம்.

* களை வளர வளர களைக்கொல்லிகளை விடாது தெளிக்கவேண்டும்.

காட்டுக் கண்டங்கத்தரி

* நிலம் தரிசாக இருக்கும்போது மட்டுமன்றி நிலத்தில் பயிர் செய்யப்பட்டிருக்கும் காலங்களிலும் மருந்து தெளிக்கவேண்டும்.

* ஆனால், இக்களையை அழிக்கும் 2, 4–டி என்ற மருந்து, பருத்தி, புகையிலை, கடலை, மிளகாய் போன்ற பயிர்களுக்குத் தீங்கு விளைவிக்குமாகையால் இவற்றை ஒன்றிரண்டு ஆண்டுகளுக்குப் பயிர் செய்யக்கூடாது.

* மேற்சொன்ன மருந்தால் தாக்கப்படாத பயிர்களான சோளம், கம்பு, ராகி, கோதுமை, கரும்பு இவற்றையே சாகுபடி செய்யவேண்டும்.

களைக்கொல்லி மருந்து தெளிக்கும் முறை.

2, 4–டி என்ற மருந்தை ஏக்கருக்கு ஒரு கிலோ கிராம் அளவில் 50—60 காலன் தண்ணீரில் கலந்து இக் களைகளின் மீது தெளிப்பதால் பூமிக்கு மேலுள்ள களை களின் எல்லாப் பாகங்களும் 2–3 வார காலங்களில் கருகிப்பட்டுப் போய் விடும்.

* ஒரு கிலோ கிராம் உபயோகித்தால் புல்லினப் பயிர் களான சோளம், கம்பு, ராகி, தினை போன்ற சிறு தானியங்கள், கோதுமை, கரும்பு இவற்றைப் பாதிக்காது.

* பட்டுப்போன களையும் குறைந்தது இரண்டு மாத காலத்திற்கு திரும்பவும் துளிர்க்காது.



காட்டுக் கண்டங்கத்தரியின் ஆழமான வேர்–
வேரின் நீளம் 4 அடி

* இரண்டு மாத காலத்திற்குப் பின்னும் பயிர் நிலத்தில் இருப்பின், இன்னுமொரு முறை 2, 4–டி மருந்தை அதே அளவில் (ஏக்கருக்கு ஒரு கிலோ கிராம்) தெளித்தால் களை பாதிக்கப்பட்டு, அதன் தொல்லை மறு படியும் இரண்டு மாதத்திற்கு இருக்காது. பயிரை தெளிக்கும் போதிலிருந்து அது வளர்ந்து அறுவடை யாகும் வரை இரண்டு மாதத்திற்கொருமுறை 2, 4–டியைத் தெளித்தால் கொஞ்சம் கொஞ்சமாக நாளாவட்டத்தில் இந்தக் களை அழிந்து விடும்.

தரிசு நிலங்களில் கையாளும் முறை.

* பயிரில்லாமல் தரிசாகக் கிடக்கும் நிலங்களில், களை ஓங்கி வளர்வதற்கு நிறைய வாய்ப்பிருக்கிறது.

* எவ்வளவுக்கெவ்வளவு களை செழித்து வளர் கிறதோ அவ்வளவுக்கவ்வளவு, அது தன் வேர்ப் பாகத்தை வலுவாக்கிக்கொண்டு, பின் நிலத்தையே பயனற்றதாக ஆக்கி விடுகிறது. தரிசாகக் கிடக்கும்போது 2, 4–டி மருந்தை எப்போதும் போல் ஏக்கருக்கு ஒரு கிலோ கிராம் அளவில் தெளித்து களையை வளர வொட்டாமல் தடுக்கவேண்டும்.

* குறிப்பாக அடுத்த பயிர் சாகுபடி ஆரம்பிக்கும் முன் அந்த நிலத்தில் களையே இல்லாத நிலைக்குக் கொண்டு வருவது மிகவும் அவசியம்.

* நடவுக்கு அல்லது விதை தெளிப்பதற்கு 10–15 நாட்கள் முன்பே மருந்தைத் தெளிப்பதால், நடவு சமயத்தில் நிலத்தில் களை எதும் உயிருடன் இருக்க முடியாது.

மாற்றுப் பயிர் முறை

* தரிசாகக் கிடக்கும் நிலத்தில் ஒன்று அல்லது இரண்டு முறை மருந்து தெளிப்பது சாலச் சிறந்தது.

* காட்டுக் கண்டங்கத்தரி பொதுவாக ஓங்கி வளரும் பயிர்களினூடே செழிப்பாக வளர்வதில்லை.

* தீவனச் சோளம், கரும்பு இவைகள் பயிர் செய்யப் பட்ட நிலங்களில், பயிரின் நிழலாலும், பயிரின் போட்டி யாலும் களையின் வளர்ச்சி வெகுவாகப் பாதிக்கப்படுகிறது.

* அங்குள்ள களைகளைப் பார்த்தால் நீண்டு மெலிந்து வலிவிழந்து காணப்படும்.

* பயிர் மாற்ற முறைகளைக் கையாளும்போது சோளத்தையும் ஒரு மாற்றுப் பயிராகக் கொள்வதால் களையின் வளர்ச்சியை மறைமுகமாக ஒதுக்குவதுடன் 2, 4–டி போன்ற மருந்துகளைத் தெளிப்பதற்கும் மிகவும் அனுகூலமாக இருக்கும்.

கீழே கண்ட முறைப்படி மாற்றுப் பயிர் செய்வதன் மூலம் கோவை மாவட்டத்தில் காட்டுக் கண்டங்கத்தரியின் தொல்லையை, ஓரளவு தவிர்க்கமுடியும்.

பயிர் செய்யும் காலம்	தற்போதைய முறை (பயிர் செய்யும் முறை)	மாற்றப்பட்ட முறை
(1)	(2)	(3)
ஆடி–தை	கம்போடியா பருத்தி அல்லது கோதுமை	கோதுமை அல்லது பெரிய மஞ்சள் சோளம்.*
தை–மாசி	தரிசு	தரிசு.*
பங்குனி–ஆனி	ராகி/கம்பு	ராகி/கம்பு*

குறிப்பு.—* குறியிட்ட இடங்களில் 2, 4–டி மருந்தை ஏக்கருக்கு ஒரு கிலோ கிராம் அளவில் 40—50 காலன் தண்ணீரில் பயிர் இருக்கும்போதோ அல்லது தரிசு நிலத்திலோ தெளிக்கவேண்டும். களை தோன்றத்தோன்ற, இரண்டு மாத இடைவெளியில் மருந்தைத் தெளிக்க வேண்டும். கோதுமை, சோளம், ராகி, கம்பு போன்ற பயிர்கள் களைக்கொல்லியால் பாதிக்கப்படாது.

(26-ம் பக்கம் பார்க்கவும்)

சென்னை ராஜ்யத்தில் விவசாய வர்த்தகம்

கே. ஸ்ரீராமன், பி. எஸ்ஸி (எஜி), எம். எஸ்ஸி., மாநில வர்த்தக அலுவலர், சென்னை.

முதற் பாகம்

விவசாயிகள் போதிய ஊக்கத்துடன் உழைத்து உணவு உற்பத்தியைப் பெருக்க அவர்களது உழைப்பிற்கேற்ற ஊதியம் கிடைக்கவேண்டும். அவர்களது விளைபொருள்களுக்கு நல்ல விலை கிடைக்கவேண்டும். விளைபொருள்கள் நேர்மையான முறையில் விற்பனை செய்யப்பட வேண்டும். விவசாயி விளைவித்த பண்டங்களை நல்ல முறையில் விற்பனை செய்வதில் காணும் வெற்றியே நமது உணவு உற்பத்தி திட்டங்களின் வெற்றியாகும்.

விவசாயப் பண்ணை நிலங்களில் விளைந்துவந்த பொருள்கள் உபயோகிப்பவரிடம் சேருமுன்பு, உற்பத்தியாளர் முதல் எத்தனையோ பேர் கைமாறி செல்கிறது. இடை நிலையில் எத்தனையோ நபர்கள் செயல்படுகிறார்கள். கிராம வியாபாரி, ஊர் ஊராகச் சென்று கொள்முதல் செய்தும் விற்றும் வரும் வியாபாரி, மொத்த வியாபாரி, கமிஷன் (தரகு) வியாபாரி, புரோக்கர் எனப்படும் தரகு வியாபாரி, சில்லரை விற்பனையாளர் என்ற இவர்கள் பண்டங்களை விற்பனை செய்யும் மார்க்கத்தில் உள்ள பலராவர். இவர்களிடையே வெவ்வேறு விதமான, தவறான நேர்மையற்ற பழக்கங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் சில, நிறுவையில் தவறு, நியாயமில்லாத தள்ளுபடியும், கழிவுகளும் செய்தல், மட்டரகப் பொருள்களைக் கலப்பது, கல், மண், தூசி, தும்பு, களிமண் இவைகளை நீக்காதிருப்பது, சேர்ப்பது, மூடுமந்திரமாக நடவடிக்கைகளையும் பேரங்களையும் செய்வது, தற்சமயம் நிலவரமான விலைவாசிகளை மறைத்து பொய் விலைவாசிகளைக் கொண்டு பேரம் நடத்துவது, விற்போர் வாங்குவோர் இடையே ஏற்படும் தகராறுகளை சுமுகமாகத் தீர்த்துவைக்க ஏற்ற ஏற்பாடுகள் ஏதுவும் இல்லாமை முதலியன. இந்தமாதிரிச் சூழ்நிலையில் விற்பனைச் சந்தைக்கு வந்த இடத்தில் விவசாயிகள் பலவிதத் தரகர்களால் எளிதில் ஏமாற்றப்படுகின்றார்கள். நல்ல முறையில் நேர்மையான ஒழுங்கு விதிகளின்படி விவசாயியின் பண்டங்களை விலைப்படுத்துவதற்கு தகுந்த சௌகரியங்கள் ஏற்படுத்தும் பொருட்டு சென்னை அரசாங்கம் **“சென்னை விவசாயப் பொருள்களின் விற்பனைச் சட்டம் 1959”** என்ற சட்டத்தை 1959-ம் வருடம் இயற்றியது. இதன்படி நெல், நிலக்கடலை, பருத்தி, புகையிலை, எள், மிளகாய், தேங்காய், முந்திரி ஆகிய பயிர்களுக்கு ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களில் விவசாயப் பண்டங்களை விற்பதிலும் வாங்குவதிலும் சீரான நடவடிக்கைகளும் செயல் முறைகளும் கடைப்பிடிக்கப்படுகின்றன. அரசாங்கம் ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியை (வழக்கமாக ஒரு மாவட்ட எல்லையை) குறிப்பிட்ட விவசாயப் பொருள்களுக்கு ஒழுங்கு முறை விற்பனை எல்லையாக அமைக்கிறது. பின் அந்த மாவட்டத்திற்கு ஒரு “விற்பனை சந்தைக் குழு” (Marketing Committee) ஒன்று நியமிக்கப்படுகிறது. இதில் விவசாயிகள், வியாபாரிகள், அதிகாரிகள்) ஆகியவர்களின் பிரதிநிதிகள் இருப்பார்கள். குறிப்பிடப்பட்ட எல்லைக்குள் பண்டங்கள் சம்பந்தப்பட்ட தரகு ஏஜெண்ட், புரோக்கர், வியாபாரி நிறுவைக்காரன் எல்லோருக்கும் (லைசென்ஸ) அனுமதி வழங்கப்படும். மேற்படி விற்பனை குழுவினரால் முக்கியமான வியாபார ஸ்தலங்களில் எல்லாம் ஒழுங்குமுறை வியாபாரக் கூடங்கள் ஏற்படுத்தப்படும். அங்கங்கே விவசாயிகளால் கொண்டு வரப்படும் விளைபொருள் எல்லாம் நேரடியாக வாங்கும் வியாபாரிகளுக்கும் மற்றவருக்கும் விற்பதற்கு எல்லா வசதிகளும் செய்து தரப்படும். கிராமத்திலிருந்து வரும் விவசாயிகளுக்கு தேவையான எல்லா வசதிகளும் அந்த விற்பனைக் கூடங்களில் செய்து தரப்படும். விவசாயிகளுக்கு அன்றைய சந்தை நிலவரம் தெளிவாகத் தெரியும் வண்ணம் அங்குவந்த மொத்த சரக்குகளின் அளவு, ரகம், மற்ற சந்தைகளில் விலைவாசிகள் எல்லாம் தெளிவாகத் தெரிவிக்கப்படும். இரகசிய ஏல முறைப்படி, ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்திற்குக் கொண்டுவரப்பட்ட பண்டங்களுக்கு நல்ல விலைபெற்றுத் தரப்படும். எனவே ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களால் சிறந்த நலன்கள் நிரம்பக் கிடைக்கின்றன. அவையாவன.

(1) விளைபொருள்களை விற்போரையும், வாங்கி உபயோகிப்பவர்களையும் ஒரே இடத்தில் சந்திக்கும் வாய்ப்பும் வசதியும் கிடைக்கிறது.

(2) சந்தையில் உண்டான செலவினங்கள் நியாயமான வரம்புக்கு உட்பட்டதும், குறிப்பாக வரையறுக்கப்பட்டும் உள்ளன. அநாவசிய செலவினங்கள் ஏதும் கிடையா.

(3) எடையளவுகள், அனுமதி (லைசென்ஸ்) பெற்ற நிறுவை அளவுகாரரால் போடப்படுகின்றன. எடையளவுகள் காலா காலத்தில் சோதிக்கப்பட்டு சரிபார்க்கப்படுகின்றன.

(4) விளைபொருள் கொண்டுவரும் விவசாயிகளுக்கு சேமிப்புக் கிடங்கு, வண்டிப்பேட்டை, மாடுகளுக்கு குடி தண்ணீர், காவல், நல்ல சுகாதாரமுள்ள தங்குமிடம், கக்கூசு முதலிய வசதிகள் உண்டு.

(5) முக்கியமான விளைபொருள் சந்தைகளில் உள்ள விலைவாசி நிலவரம், சரக்குகள், வரவு, இருப்பு போன்ற முக்கியமான தகவல்களை வாங்குபவர், விற்பவர்கட்கு அறிவித்து அப்போதைய சந்தை நிலவரம், போக்கு இவைகளை அறிய வசதி செய்தல்.

(6) பேரம் முடிந்தவுடன் பொருள்களை வாங்குபவர், விற்ற விவசாயிகளுக்கு அன்றே பணத்தைக் கொடுத்து விட ஏற்பாடு செய்தல்.

(7) மொத்த கொள்முதல் செய்ய ஓர் வசதியான சேமிப்பு இடமாக உதவுதல்.

(8) தகுந்த தரக்கட்டுப்பாடு விதிகளையும் தர நிர்ணய பட்டியல்களையும் கொண்டு வாங்குவது, விற்பது சம்பந்த மாக, உபயோகிக்க ஏற்ற இடமாய் இருத்தல்.

(9) ஒளிவு மறைவு இல்லாமல் எல்லாருக்கும் தெரியும்படி நேர்மையான முறைகளே மேற்கொள்ளப்படுகின்றன.

(10) வாங்குவோர்களிடையே ஏற்படும் நல்ல போட்டியால், விற்பனை செய்யும் விவசாயிகளுக்கு நியாயமான விலையே கிடைக்கிறது.

இதுவரை 68 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் நிறுவப் பட்டுள்ளன. மூன்றும் ஐந்தாண்டு திட்ட இறுதி காலத்திற்குள் நீலகிரி நீங்கலாக எல்லா மாவட்டங்களிலும் மொத்தம் 103 விற்பனைக் கூடங்கள் செயல்படும்.

தரம் பிரித்தல்

விவசாய பண்டங்களைத் தரம் பிரித்து விலைப்படுத்தினால் விற்பவர் வாங்குபவர் இருவருக்கும் பரஸ்பர நம்பிக்கையும் திருப்தியும் ஏற்படுகிறது. உபயோகிப்பவர் தரம் விரும்பிய சரக்குகளைப் பெற்று மகிழ்கிறார். உற்பத்தியாளர் அதிக லாபமடைந்து ஊக்கமடைகிறார். 1937–ம் ஆண்டு இந்திய அரசாங்கம் "விவசாய விளைபொருள் பண்டங்கள் (தரம் பிரித்தலும், குறியிடுதலும்) சட்டம்" என்ற ஒரு சட்டம் இயற்றியது. இதன்படி பல்வேறு விவசாய பண்டங்களும், கால்நடை உதவு பொருள்களும் வெவ்வேறு தரங்களாக ஆராய்ந்து பிரிக்கப்படுகின்றன. இவ்வாறு தரம் பிரிக்கப்பட்ட பண்டங்கள் "அக்மார்க்" பொருள்கள் எனப்படுகின்றன. "அக்மார்க்" என்பது "அக்ரிகல்ச்சரல் மார்க்கெட்டிங்" அல்லது "விவசாய பொருள்களின் விற்பனை" என்பதைக் குறிக்கிறது. இத்தகைய அக்மார்க் முத்திரை அப்பொருள்களின் தூய்மைக்கும், புத்தம் புது தன்மைக்கும், தரமுள்ள குணத்திற்கும் ஒரு உத்திரவாதச் சின்னம்". "அக்மார்க்" குறியிட்ட பொருள்களை வெளிநாட்டார் விரும்பி அதிக அளவில் இறக்குமதி செய்கிறார்கள். அவைகளுக்கு நல்ல விலையும் கிடைக்கிறது. சரக்குகள் ஏராளமாக விற்பனையாகிறது. தரங்களுக்கு ஏற்றவாறு குறிப்பிட்ட நிறையளவு கொண்ட பாக்கிங், டின், மூட்டை இவைகளுக்கு விலை கூறவும் சுலபமாகிறது. "அக்மார்க்" தரம் பிரித்தல் அவரவர் உள்நாட்டு விற்பனைப் பொருள்களை விருப்பத்தைப் பொறுத்தது; எந்தவிதமான பலவந்தமும் கிடையாது. வர்த்தக அதிகாரியால் சிபாரிசு செய்த, தகுந்த தனிப்பட்டவர் அல்லது ஸ்தாபனங்களுக்கு தங்கள் பண்டங்களை தரம் பிரித்து, அக்மார்க் சின்னம் பொறித்து அவைகளை விற்று விநியோகம் செய்ய இந்திய விவசாய வர்த்தக ஆலோசகர் அனுமதி வழங்குவார். இவர்கள் செய்யும் தரம் பிரித்தல் வேலையை மிகவும் நுணுக்கமாகவும், கறாராகவும் கண்காணிக்க, மத்திய அரசாங்கத் தரப்பின் தகுந்த பரிசோதகர்கள், அப்பொருள்களிலிருந்து மேலும் "மாதிரி" எடுத்து பரிசோதிக்கிறார்கள். இப்பொருள்கள் விற்பனையாகும் இடம், உபயோகிக்கப்படும் இடம், சில்லரை, மொத்த வியாபாரிகளிடத்திலும், தரம் பிரிக்கும் சமயத்திலும் இதற்கான "மாதிரிகளை" எடுத்து சோதிக்கிறார்கள்.

உள்நாட்டு விற்பனைப் பொருள்களில் கீழ்க்கண்ட உணவுப் பொருள்கள் "அக்மார்க்" தரம் பிரிக்கப்படுகின்றன.

(1) நெய்
(2) நல்லெண்ணெய்
(3) நிலக்கடலை எண்ணெய்
(4) கோழி முட்டை
(5) அரிசி
(6) கரும்பு வெல்லம்
(7) உருளைக்கிழங்கு
(8) சாத்துக்குடி, ஆரஞ்சு
(9) மாம்பழம்

மற்றும் கீழ்க்காணும் பொருள்களையும் "அக்மார்க்" தரம் பிரித்து விற்பனை செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

(1) தேங்காய் எண்ணெய்
(2) ஆமணக்கு எண்ணெய்
(3) தேன்
(4) பாக்கு
(5) பயறு வகைகள் (உளுந்து, துவரம் பருப்பு முதலியன)
(6) பருத்தி (பஞ்சு)

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் பொருள்களில் கீழ்க்கண்டவை (1878-ம் ஆண்டு கடற் சுங்கச் சட்டம், 19-ம் பிரிவின்படி) "அக்மார்க்" தரம் பிரிக்கப்படுகின்றன.

1. சணல் (சடம்பு நார்)
2. புகையிலை
3. ஆட்டுமயிர், கம்பளம்
4. பனந்தும்புகள் நார்கள்
5. சந்தனக்கட்டை எண்ணெய், லெமன்புல்லின் எண்ணெய் போன்ற ஆவியாகும் மருந்தெண்ணெய்கள்,

3-வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் வெளிநாட்டுக்கு ஏற்றுமதியாகும் கீழ்க்கண்ட பொருள்களுக்கும் கட்டாயத் தரம் பிரித்தலை அனுசரிக்க விருக்கிறார்கள்.

1. மிளகு
2. இஞ்சி
3. ஏலக்காய்
4. தாவர எண்ணெய்கள்
5. பொறுக்கு மணிலாக் கொட்டைகள்
6. தோல்கள் (பதனிடாதவை)
7. பதனிட்ட தோல்கள்
8. இலவம்பஞ்சு
9. கடுக்காய்

இப்பொருள்களின் தரம் பிரித்தலை நேரடியாக மேற்பார்வையிடும் பொறுப்பும் பணியும் மத்திய அரசாங்கத்தின் விவசாய வர்த்தக பரிசோதனை மேலாளர் அலுவலகத்தைச் சேர்ந்தது.

விவசாயச் செய்திக் கதிர்

(M. காசி விஸ்வநாதன், T. ரகோத்தமராவ், விரிவிணைப் பிரிவு, கோவை.)

கரும்பிற்கு இலைகள் மூலம் உணவு செலுத்துதல்.

கரும்புப் பயிருக்கு இலைகள் மூலம் உணவுச் சத்தை அளிப்பதன் மூலம் சிறந்த கரும்பு மகசூல் கிடைக்கிறது. கடலூர் கரும்பு ஆராய்ச்சிப் பண்ணையில் மூன்றாண்டு களாக இது சம்பந்தமான பரிசோதனை செய்யப்பட்டது. இப்பரிசோதனைகளிலிருந்து ஆரம்பத்தில் கரும்புப் பயிர் முளைத்து நிலைப்பதற்கு மண்ணால் தழைச்சத்து உரத்தை இட்டு, சிறிது வளர்ச்சியடைந்து, பயிர் நிலை பெற்றதும் தழைச் சத்துள்ள உரக் கரைசலை பயிரின்மேல் தெளிப் பதன் மூலம் சிறந்த மகசூல் அடையலாம் என்று தெரிகிறது. இப்பரிசோதனைகளில் யூரியா உபயோகிக்கப் பட்டது. இவ்வாறு உரமிடுவதற்கு ஏக்கருக்கு மண்ணில் 100 ராத்தல் தழைச் சத்துள்ள உரமும், அதோடு 50 ராத்தல் தழைச் சத்துள்ள உரத்தை உரக்கரைசலாகவும் பயிரின் மேல் தெளிக்க வேண்டும்.

பயறுவகைகளைத் தாக்கும் பூச்சிகளைக் கட்டுப்படுத்துதல்

துவரைப் பெரிய காய்ப்புழு (Heliothis sp).—துவரையில் விழும் பூச்சிகளில் முக்கியமானது பெரிய காய்ப்புழுவாகும். பச்சை நிறமான இப்புழுவுன் உடலில் பக்கவாட்டில் நீண்ட சாம்பல் நிறக்கோடுகள் உடையது. இளஞ்செடிகளின் துளிர் இலைகளையும், காய் தோன்றிய பின் காய்களைத் துளைத்தும் சேதம் உண்டாக்குகிறது. இதன் கூட்டுப்புழு மண்ணில் உண்டாகிறது. துவரையைத் தவிர கடலை, காராமணி போன்ற பயறு வகைகளையும், சோளம், பருத்தி, புகையிலை ஆகிய செடிகளின் இலைகளையும் தின்று சேதப் படுத்துகிறது. இப் பூச்சியை “டைலாக்ஸ்” (டிப்டிரக்ஸ்) 0.1 சதவீதம் (ஒரு ராத்தல் 80 சதவீதம் நீரில் கரையும் தூளுக்கு ஐந்து காலன் தண்ணீர் வீதம் கலந்து) தெளித்துக் கட்டுப்படுத்தலாம் அல்லது என்டிரின் 0.02 சதவீத மருந்தையும் உபயோகிக்கலாம். கடலைப் பயிரில் இப் பூச்சியை பி.எச்.சி. 5 சதவீதம் தூள் தூவியோ அல்லது டையல்டிரின் 0.1 சதவீதம் மருந்தைத் தெளித்தோ கட்டுப்படுத்தலாம்.

துவரைக் காய்ப்புழு (Exelastes atomosa).—இப்புழு அரை அங்குல நீளமுடையதாயும் பச்சைப் பழுப்பு நிற முடையதாயும் உடலின்மேல் குட்டையான மயிர் அல்லது முள் போன்ற பாகங்களை உடையதாயும் இருக்கும். இது காயைச் சுரண்டி அதில் துளை செய்து அதன்மூலம் பருப்பைத் தின்கிறது. இதன் அந்துப் பூச்சி மெல்லிய மிருதுவான உடலையும், சிறகு போன்ற படிப்படியான அமைப்புடைய இறக்கைகளையும் உடையது. இக்காய்ப் புழுவை டி.டி.டீ. ஐந்து சதவீதத் தூளை தூவியோ அல்லது டி.டி.டீ. 50 சதவீதம் நீரில் கரையும் தூளை 30 காலன் நீரில் ஒரு ராத்தல் மருந்து வீதம் கலந்து தெளித்தோ கட்டுப்படுத்தலாம்.

காராமணி குருத்து துளைக்கும் ஈ

சாதாரண வீட்டு ஈயைப் போன்றே காட்சியளிக்கும் கருநீல நிறமுள்ள இந்த ஈயின் புழுக்கள் இளந்தண்டு களைத் துளைத்து சேதமேற்படுத்துகின்றன. இதனால் செடிகள் குட்டையாகி வாட ஆரம்பிக்கின்றன.

செடியின் உட்பகுதியிலிருப்பதால், இப்பூச்சி பெருகு வதைத் தடுக்க தாக்கப்பட்ட செடிகளை அகற்றி எரித்து அழித்துவிட வேண்டும். இவை விரைவாக இனப் பெருக்கம் செய்யும் காலத்தில் டி.டி.டீ. 50 சதவீதம் நீரில் கரையும் தூளை உபயோகித்து இதைக் கட்டுப்படுத்தலாம். இதைத் தவிர துவரையைத் தாக்கும் பூச்சிகள் காரா மணியையும் தாக்குகின்றன.

கடலைப் பயறும் பச்சைப் பயறும் தீவிரமாக எப்பூச்சி யாலும் தாக்கப்படுவதில்லை. சில சமயங்களில் இலைகளைத் தின்னும் புழுக்கள் இப்பயறுச் செடிகளைத் தாக்கி சேதம் விளைவிக்கின்றன. டி.டி.டீ. ஐந்து சதவீதத் தூள் அல்லது பி.எச்.சி பத்து சதவீதத் தூளை உபயோகித்து இவற்றைக் கட்டுப்படுத்தலாம்.

விதை கலக்க விசை இயந்திரம்

விதைக்கு முன் விதைகளை மருந்துடன் கலக்க மின் விசையால் இயங்கும் இயந்திரம் ஒன்று உள்ளது. கையால் சுழலும் விதை கலக்கும் கருவியில் 10–15 நிமிடங்கள் சுற்றி விதை குலுக்குவதற்கு பதில் இந்த இயந்திரத்தை ஐந்து நிமிடங்கள் இயக்கினால் போதுமானது; விதைகள் மருந்துடன் சீராகக் கலந்து விடுகிறது.

* இந்த இயந்திரத்தில் 0.25 எச்.பி. உள்ள மோட்டார் ஒன்று இணைக்கப்பட்டுள்ளது. ஆதலால் இதை இயக்குவது எளிது.

* இது மிதமான வேகத்தில (நிமிடத்திற்கு 45 சுழற்சி) இயங்குவதால் விதைகள் உடைபடுவதில்லை.

* இதில் 12 உருளை வடிவ தகரப் பாத்திரங்கள் உள்ளன. இவைகளில் 400 கிராம் நெல் அல்லது 320 கிராம் சோளம் பிடிக்கும். ஒரே தடவையில் பல பயிர் விதைகளைக் குலுக்கலாம்.

இவ்வியந்திரத்தைப் பற்றி மேலும் அறிய விரும்புவோர் “உதவி விவசாய என்ஜினியர் (ஆராய்ச்சி), விவசாயக் கல்லூரி ஆராய்ச்சி நிலையம், கோவை–3” என்ற விலாசத் திற்கு எழுதிக் கேட்கவும்.

பூச்சி மருந்துகள் ஜாக்கிரதை!

பூச்சிகளைக் கொல்ல உதவும் பூச்சி மருந்துகள் அப் பூச்சியைத் தாக்கும் பயிர்களையும் பாதிக்கலாம்! சில பூச்சி மருந்துகள் செடிகளில் விரும்பத்தகாத மாறுதல் களை ஏற்படுத்துகின்றன. இது சம்பந்தமாக விவசாயக் கல்லூரி ஆராய்ச்சி நிலையத்திலுள்ள பூச்சிப் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளிலிருந்து பின்வருபவை தெளிவாகின்றன.

0.1 சதவீதம் பி.எச்.சி., 0.1 சதவீதம் டயாசினான் மருந்துகள் தெளிக்கப்பட்ட கடலை, காராமணி, ஆகிய வற்றின் பயறு அருவருப்பான உருசி உடையனவாய் இருந்தன. பாசுதீன் மருந்து தெளிக்கப்பட்ட காராமணி யின் உருசியும் அருவருப்பாக மாறுகிறது. லின்டேன், பாராதியான் ஆகிய மருந்துகள் கொத்தவரையின் வளர்ச்சியையும் மகசூலையும் பாதித்தன. டயாசினான், பி.எச்.சி. ஆகிய மருந்துகள் அடிக்கப்பட்ட கொத்த வரைச் செடியின் இலைகள் பாதிக்கப்பட்டன. அதேபோல் பி.எச்.சி., டயசினான், லின்டேன், ஆல்ட்ரின், டி.டி.டீ. மருந்துகள் அடிக்கப்பட்ட மரவள்ளிக் கிழங்கும் பாதிக்கப் பட்டது. ஆகவே மேற்கூறிய பயிர்களில் பூச்சி மருந் தடிக்கும்போது விரும்பத் தகாத மாற்றங்களை உண்டு பண்ணும் மருந்துகளை உபயோகிக்காமலிருக்க வேண்டும்.

1964-ம்௵ மே மாதக் காலநிலை அறிக்கை

(சி. பாலசுப்ரமணியன், சீ. ரங்கநாதன், விவசாயக் காலநிலை ஆய்வுப் பிரிவு, கோவை-3.)

இம் மாத முதல் இரு தினங்களில் தமிழகத்தின் சிற்சில இடங்களில் மழை பெய்தது. 3-ம் தேதியன்று ஆங்காங்கு மழையிருந்தது. மறுபடியும் ஐந்து நாட்களுக்கு தொடர்ச்சியாக சிற்சில இடங்களில் மழையிருந்தது. அதன் பின்னர் மூன்று நாட்கள் காலநிலை வரட்சியாக இருந்தது. 12-ம் தேதி முதல் 25-ம் தேதி வரை பதிநான்கு நாட்களில் தொடர்ச்சியாக தமிழ்நாட்டின் சிற்சில இடங்களில் மழை பெய்தது. 26, 27-ம் தேதிகளில் பொதுவாக வரட்சி நிலவியது. இம் மாத கடைசி நான்கு நாட்களில் சிற்சில இடங்களில் இலேசான மழையிருந்தது.

இம் மாதம் பகல் வெப்ப நிலை 14 நாட்கள் சராசரிக்கு உயர்ந்திருந்தது. எஞ்சிய நாட்களில் பகல் வெப்பம் பொதுவாக சீராகவேயிருந்தது.

கால நிலையும் பயிர் வளர்ச்சியும்

செங்கற்பட்டு மாவட்டத்தில் மழையில்லை. திரூர் பகுதிகளில் 23-ம் தேதி வீசிய பெருங் காற்றினால் பப்பாளி மற்றும் தென்னை மரங்களும் தலை சாய்ந்தன. ஆனால் பருத்தி வெடிப்புக்கு இக் காற்று உதவியாயிருந்தது. தென்னாற்காடு பகுதிகளில் இலேசான மழையிருந்தது. குடியாத்தம் பகுதியில் பெய்த மழை கரும்புக்கு உதவியது. பாலூர் பகுதிகளில் பெய்த மழை கரும்பு, மரவல்லி, சணப்பு முதலிய பயிர்களுக்கு உதவியது. திண்டிவனம் பகுதியில் எள், நிலக்கடலை முதலியன விதைப்புக்கு வந்தன. இங்கு எட் பயிரை இலைபின்னும் பூச்சி (Leaf webber), நிலக்கடலையை டிக்கா இலைப்புள்ளி நோயும் சிறிதளவு தாக்கின.

வட ஆற்காடு மாவட்டத்தில் சற்று அதிக மழையிருந்தது. வேலூரில் பெய்த மழையினால் நெல், கரும்பு, ராகி, பருத்தி முதலிய பயிர்கள் பயனுற்றன. இம் மாதம் கரும்பு நடவும், அறுவடையும், ராகி, சொர்ணவாரி நெல் நடவும் மேற்கொள்ளப்பட்டன. நெல், ராகி விதைப்பும் தலைக்கொள்ளப்பட்டது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் ஆடுதுறைப் பகுதியில் சற்று கனத்த மழையிருந்தது. இம் மழையின் உதவியால் நிலங்கள் பயன்படுத்தப்பட்டன. பசுந்தாளுரச் செடிகளுக்கு இம்மழை மிகவும் உகந்திருந்தது. பட்டுக்கோட்டை பகுதிகளில் பெய்த மழை மிகவும் குறைவு. போதிய மழையின்மையால் எள், கொள்ளு முதலிய கோடைப் பயிர்கள் வாட்டமுற்றன. இங்கு நிலக்கடலையில் சிறிதளவு இலைப் புள்ளி நோய் காணப்பட்டது.

திருச்சி மாவட்டத்தில் சுமாரான மழையிருந்தது. இம் மழையால் வாழை, கரும்பு, சோளம் முதலிய பயிர்கள் பயனுற்றன. நிலங்கள் உழுது பண்படுத்தவும் உதவிற்று. இராமநாதபுரம் மாவட்டத்தில் மழை மிகவும் குறைவு. சாத்தூர் பகுதியில் பெய்த மழையால் பருத்தி, சோளம் முதலிய பயிர்கள் பயனுற்றன. இங்கு கரும்பு நடவும், நிலக்கடலை அறுவடையும் நடைபெற்றன. சிவகங்கை பகுதியில் பருத்தியில் நாவாய் பூச்சிகளும், காய்ப் புழுவும், கடலையில் அசுவும், கத்தரியில் புள்ளி வண்டும் வெகுவாகக் காணப்பட்டன.

திருநெல்வேலி மாவட்டத்தில் சுமாரான மழையிருந்தது. இம் மழையால் நெல், பருத்தி, கடலை, சோளம் முதலிய பயிர்கள் பயனுற்றன. ஆனால் மழை குறைவினால் நெல் நாற்றங்காலில் விதைப்பு தாமதமாயிற்று. கோயில்பட்டி பகுதியில் பெய்த மழையால் பூக்கள் உதிர்ந்தன. கோடைப் பருத்தியில் காய்ப் புழுவும், லட்சுமி பருத்தியில் கருங்கிளை நோயும், சிறிது அசுவும், காய்ப் புழுக்களும் காணப்பட்டன.

கன்னியாகுமரி மாவட்டத்தில் மழை குறைவாகவே இருந்தது. போதிய மழையின்மையால் நெல் நாற்றங்கால்களும், பசுந்தாளுரச் செடிகளும் வாட்டமுற்றன. இங்கு நெற் பயிரை தண்டுப் புழுக்கள் மிதமாகவும், மா மரத்தை சாம்பல் நோய் அதிகமாகவும் தாக்கின. மதுரை மாவட்டத்தில் மழை மிகவும் குறைவு. மழையின்மையால் நெல் விதைப்பும், நிலங்கள் பண் படுத்தவும் தடங்கலாயிற்று.

சேலம் மாவட்டத்தில் சற்று மழை அதிகம். இம் மழையால் நிலங்கள் உழுது பண்படுத்தப்பட்டன. நாமக்கல் பகுதியில் கார் நெல், கம்பு, கடலை, சோளம் முதலியன விதைப்புக்கு வந்தன. சில இடங்களில் கார் நெல் அறுவடையாயிற்று. இங்கு பருத்தியில் காய்ப்புழுக்களும், திரிப்சும், நாவாய் பூச்சிகளும், சிறிதளவு காய்வாடல், கருங்கிளை நோயும் காணப்பட்டன. மிளகாய் பயிரில் துளைப்பான்களும், காய் அழுகல் நோயும், திரிப்சும் மிதமாகக் காணப்பட்டன. நிலக்கடலையில் பெருமளவு திரிப்சும், அசுவும் கத்தரியில் புள்ளி வண்டும், துளைப்பான்களும், சிறிது அசுவும் நெற் பயிரில் கொள்ளை நோயும் காணப்பட்டன.

கோவை மாவட்டத்தில் சுமாரான மழையிருந்தது. இங்கு நிலக்கடலை, கம்பு விதைப்பும், ராகி நடவும், சோளம் அறுவடையும் இம் மாதம் மேற்கொள்ளப்பட்டன. இங்கு ராகிப் பயிரில் கொள்ளை நோயும் வெண்டை கத்தரியில் புள்ளி வண்டுகளும், நாவாய் பூச்சிகளும், சோளப் பயிரில் கதிர் வண்டும் வெகுவாகக் காணப்பட்டன. ஈரோடு பகுதியில் பெய்த மழையில், பருத்தி, கரும்பு, சோளம் பசுந்தாளுரச் செடிகள் முதலியன பயனுற்றன. பருத்தியில் சிறிது அசுக்கள் காணப்பட்டன. பொள்ளாச்சி பகுதியில் சோளம், சாமை, கடலைகள் விதைக்கப்பட்டன. மிளகாய் நாற்றுக்கள் நடவுக்கு வந்தன. இங்கு நிலக்கடலையை சிகப்பு கம்பளிப் பூச்சிகள் தாக்கின. ஆழியார் பகுதியில் இம் மாதத்தில் பெரும்பாலான நாட்கள் மணற்காற்று வீசியது. இங்கு பருத்தியை காய்ப் புழுக்களும் நிலக்கடலையை அசுவும் மிதமாகத் தாக்கின.

நீலகிரி மாவட்டத்தில் சுமாரான மழையிருந்தது. இம் மழை கோடைப் பயிர் உருளைக் கிழங்குக்கு உதவியது.

இம் மாதத்திய குறிப்பிடத்தக்க மழையளவுகளும், பிராந்திய மழையளவுகளும் பின்வருமாறு:—

குறிப்பிடத்தக்க மழையளவுகள் (அங்குலத்தில்)

வரிசை எண்.	தேதி.	இடத்தின் பெயர்.	மழையளவு.
1	7–5–64	கொடைக்கானல்	3·94
2	24–5–64	ஆடுதுறை	2·36
3	31–5–64	சேலம்	2·80

1964-ம் ஆண்டு மே மாதக் காலநிலை அறிக்கை

மழை அளவு (அங்குலத்தில்)

இடத்தின் பெயர்.	இம்மாத மொத்த மழை அளவு.	சராசரி யிலிருந்து மாறுபாடு.	ஜனவரி 1-ம் தேதி முதல் மொத்த மழை யளவு.
(1)	(2)	(3)	(4)
வட பிராந்தியம்			
சென்னை (மீனம்பாக்கம்)	†	—1·0	†
திரூர் குப்பம்*	0·3	—1·6	0·3
வேலூர்	3·0	+0·7	3·0
குடியாத்தம்*	2·2	—1·5	2·9
கிழ்கரைப் பிராந்தியம்			
பாலூர்*	0·7	—1·6	0·7
திண்டிவனம்*	0·6	—1·3	0 7
கடலூர்	0·1	—0·9	0·4
நாகப்பட்டணம்	0·6	—1·0	0·6
ஆடுதுறை*	4·9	+1·8	6·4
பட்டுக்கோட்டை*	1·3	—0·8	1·5
மத்திய பிராந்தியம்			
சேலம்	9·1	+4·5	9·8
சேலம்*	6·6	+3·9	7·4
கோயம்புத்தூர்*	3·0	‡	3·1
கோயம்புத்தூர்	3·8	—1·3	3 8
ஆளியார் நகர்	1·1	—3·3	1·9
திருச்சிராப்பள்ளி	2·7	—0·1	3·3
தென் பிராந்தியம்			
மதுரை	0·8	—2·0	1·0
பாம்பன்	0·1	—0·9	3·5
கோவில்பட்டி*	1·5	—1·1	7·5
பாளையங்கோட்டை	1·0	—0·7	7·0
அம்பாசமுத்திரம்*	0·2	—2·6	9·0
நாகர்கோயில்*	2·0	—5·7	3·8
கன்னியாகுமரி	1·3	—3·8	3·8
மலை பிராந்தியம்			
கொடைக்கானல்	8·9	+2·5	15·2
கூனூர்*	3·0	—1 3	9·7
உதகமண்டலம்*	7·2	—2·6	8·0
நஞ்சநாடு	4·8	—3·4	5·6

*குறிப்பு.—சென்னை விவசாய இலாகாவின் ஆராய்ச்சிப் பண்ணைகள். †=0·04″ ‡=0·01″.

(21-ம் பக்கம்—தொடர்ச்சி)

மருந்து தெளிக்கும்போது கவனிக்க வேண்டிய முறைகள்.

(1) பொதுவாகத் தாவர இனத்தையே கொல்லும் இரசாயன மருந்துகளைக் கையாளுவதால், சரியான அளவையே பயன்படுத்த வேண்டியது அவசியம். அதிகமானால் பயிரே அழிந்துவிடும்.

(2) மருந்தைத் தண்ணீரில் கலக்கவும்—தண்ணீரை மருந்திலிடவேண்டாம்.

(3) களைக்கொல்லிகளைத் தெளிக்கத் தனியான ஸ்ப்ரேயர் உபயோகிக்கவேண்டும். எக்காரணம் கொண்டும் பயிர்ப் பாதுகாப்பு வேலைக்காக வைத்திருக்கும் சாதனங்களை களைக்கொல்லியைத் தெளிக்கப் பயன்படுத்தக்கூடாது. ஸ்ப்ரேயரில் ஒட்டிக் கொண்டிருக்கும் சிறு துளிகள்கூட பின்னால் பயிருக்குத் தீங்கு விளைவிக்கலாம்.

(4) மழை, காற்றுக் காலங்கள் தவிர்த்து மற்ற எல்லாக் காலங்களில் அதிகாலை (அல்லது வெயில் எறுவதற்கு முன்) அல்லது மாலை (வெயில் தாழ்ந்த பின்) வேளைகளில், காற்றுச் சலனமே இல்லாதபோது மருந்தைத் தெளிக்கவேண்டும். காற்று மருந்தை அண்டை அயல் வயல்களிலுள்ள பயிரின் மேல் விழச் செய்யலாம். வெயிலோ மருந்து செடியினுள் போவதற்குள் ஆவியாகி விடச் செய்துவிடும்.

(5) பருத்தி, ஆமணக்கு, கடலை, புகையிலை, மிளகாய் ஆகிய பயிர்கள் 2, 4–டி மருந்து கொஞ்சம் பட்டாலே பட்டுப்போய்விடும். ஆகவே, இப் பயிர்கள் உள்ள நிலங்களில் 2, 4–டி தெளிப்பது தவறு. பக்கத்து வயல்களில் இப் பயிர்கள் இருப்பின் காற்றோட்டம் இல்லாத வேலைகளில் மட்டுமே களைக்கொல்லிகளைத் தெளிக்க வேண்டும்.

(6) களைகள் சிறு செடிகளாக இருக்கும்போது முக்கியமாக பூப்பதற்கு முன், மருந்து தெளிப்பது களைகளை சுலபமாக அழிப்பதுடன், செலவும் நேரமும் மிச்சமாகும்.

(7) களைக் கொல்லிகள் பொதுவாக மனிதனுக்கோ, கால்நடைகளுக்கோ எந்தவிதமான தீங்கும் செய்வதில்லை. ஆயினும் மருந்து தெளித்தவுடன், உடலைச் சுத்தம், செய்து கொள்வது மிகவும் சிறந்தது.

(8) மருந்து தெளித்த பத்துப் பதினைந்து நாட்களில் வயலில் எந்தப் பயிரையும் நடலாம் அல்லது தெளிக்கலாம். பயிருக்கு எந்தத் தீங்கும் நேராது.

(9) ஒரு கிலோ கிராம் 2, 4–டி ரூ. 5·25 முதல் ரூ. 8 வரை விற்கப்படுகின்றது. ஹெடனால் (Bayer), டாபாசைடு (Tata–Fison), பெர்னாக்சான் (ICI), ஹெக்சாமர் (Bharat Pulverising Mills), ப்ளேடக்ஸ் (M&B) என்ற பெயர்களில், 2, 4–டி எல்லா மாவட்டங்களின் தலை நகரங்களிலும் விற்பனைக்குக் கிடைக்கின்றது.

இன்று கோவை மாவட்டம் ஒன்றில் மட்டும் காணப்படும் இந்தக் காட்டுக் கண்டங்கத்தரியை கவனிக்காமல் விட்டுவிட்டால் விரைவில் தமிழகம் முழுவதுமே பரவி, வேளாண்மைக்கு பெரும் இடையூறாக ஆனாலும் ஆகலாம். தகுந்த தடுப்பு முறை எடுத்துக்கொண்டு இக்களையை பரவ வொட்டாது உடனடியாகத் தடுக்கவேண்டும்.

வெற்றிப் பாதை

விவசாய விளம்பர நாடகம்

[கே. எஸ் ஆலம்கிர், பி.எஸ்.ஸி., (எஜி.), விவசாயக் கல்லூரி, கோவை]

காட்சி 13

சோமு, சுசீலா, வேலாயுதம், வேதாசலம்.

(சோமு மண் வெட்டியைப் பழுது பார்த்துக்கொண்டு இருக்கிறுன்) சுசிலா உள்ளே நுழைகிறுள்.

சுசிலா : லட்சுமி அக்கா இருக்காங்களா ?

சோமு : அடேடே சுசீலாவா வாங்க வாங்க உட்காருங்க.

சுசிலா : அக்காவைப் பார்க்கலாம்னு வந்தேன்.

சோமு : வர்ர வழிலே பார்த்திருப்பீங்களே பரவாயில்லே நான் போயி கூட்டிகிட்டு வரேன்.

சுசிலா : இருக்கட்டும் (நாணத்தோடு) விவசாயமெல்லாம் எப்படி இருக்கு ?

சோமு : அழகா இருக்கு......

சுசிலா : என்ன !

சோமு : விவசாயமெல்லாம் அழகா நடக்குதுன்னு சொன் னேன். காப்பி குடிக்கறீங்களா ?

சுசிலா : வேண்டாம்.

சோமு : அண்ணியக் கூப்பிடட்டுமா ?

சுசிலா : உஹூம்....

சோமு : சேர்மன் ஐயா வந்திருக்காரா ?

சுசிலா : அப்பா வா......வந்திருக்கார்.

சோமு : அப்போ நான் போயி அவரைப் பார்த்துட்டு வரேன்......

சுசிலா : எங்கப்பாவும், உங்கப்பாவும் பேசிக்கிட்டு இருக் காங்க....

சோமு : என்ன பேசிகிட்டு இருக்காங்க....

சுசிலா : அதென்னமோ எனக்குத் தெரியாது. ரொம்ப சுவாரஸ்யமா பேசிகிட்டு இருக்காங்க......

சோமு : எங்க குடும்பத்தையே கை தூக்கி விட்டவர் உங்கப்பா..அவர் என்ன பேசப் போறுறு...... எங்களுடைய நன்மைக்காக இன்னும் எவ்வளவு உதவி செய்யலாம்னு சொல்லிக்கிட்டிருப்பாரு.. இவ்வளவு உதவி செய்யற உங்கப்பாவுக்கு எப்படி கைம்மாறு செய்யறதுன்னு எங்களுக்குத் தோணலே..

சுசிலா : அப்படி ஒண்ணும் பெரிய உதவி செஞ்சுடலே அவருடைய கடமையைச் செஞ்சாரு....எப்படி நீங்க கைம்மாறு செய்யணும்னு காத்திருங்க சமயம் பார்த்து நாங்கள் வர்ரோம். நான் வர்ரேன் (நாணிக்கோணி செல்கிறுள்).

சோமு : அண்ணியைப் பார்க்கணும்னு சொன்னீங்களே ?

சுசிலா : வர்ர வழிலேயே பார்த்துட்டேன். உங்க கிட்டே சும்மா சொன்னேன் பார்க்கலேன்னு....

சோமு : ஒஹோ அப்படியா சங்கதி (இருவரும் போகின்ற னர். வேலாயுதமும் வேதாசலமும் அவர்களைப் பார்த்து விட்டு நுழைகின்றனர்.

வேலாயுதம் : (பதட்டத்துடன்) நம்ம சுசீலா இப்படி வந்தி ருக்கு....ம் சோமு பார்த்துட்டு உபசாரம் பண்ணி யிருப்பான் வேறு ஒண்ணுமில்லீங்க....

வேதாசலம் : வேலாயுதம்....நான் இப்படி நடக்கும்னு எதிர் பார்த்தேன்.

வேலா : நான் எதிர் பார்க்கலீங்க....ஏதோ தவறுதலா நடந்து போச்சு.... மன்னிக்கணும்....

வேதா : (கோபத்தோடு) வேலாயுதம் இப்படி நடக்கும் இப்படித்தான் நடக்கணும்னு நான் நெனச்சுகிட்டு இருந்தேன்....

வேலா : என்ன சொல்றீங்க ?

ஸ்தாபிதம் 1885

தந்தி : நர்சரி   போன் : 3210

79 வருடங்களாக சேவை செய்து வரும் கான் சாஹிப் S. K. I. ஹாஜீ அப்துல் ரஹிமான் சாஹிப் ஸ்தாபனம்.

சேலம் நர்சரி கார்டன்ஸ், சேலம்.

புகழ்பெற்ற ஒட்டு மாஞ்செடிகள், எலுமிச்சை, தென்னை, இதர பழச் செடிகள், அலங்காரச் செடிகள், காய்கறி, புஷ்ப விதை களுக்குச் சிறந்த இடம்.

Proprietor :

S. K. A. அப்துல் ரஜாக் சாயுபு.
சேலம் நர்சரி கார்டன்ஸ்,
செரி ரோடு, சேலம்-7.
(S. India.)

வேதா: தப்பு நடந்து போலேய்யா. நடக்க வேண்டியது தான் நடந்திருக்கு....நாமரெண்டு பேரும் சம்பந்திகள் ஆறதுக்கு ஆரம்ப வேலே நடந்திருக்கு.

வேலா: சேர்மன் ஐயா நிசமாத்தான் சொல்றீங்களா

வேதா: (ஆச்சரியத்தோடு) நான் என்னிக்கு ஐயா பொய் சொல்லி இருக்கேன்.

வேலா: (மகிழ்ச்சி பொங்க) உங்களே என்ன சொல்றதுன்னு தெரியல்லே.... எனக்கு வாயே வரலே மூச்சே நின்னுடும் போல இருக்கு.

வேதா: சரி சரி வாங்க போகலாம்....

காட்சி 14

இடம்: பஞ்சாயத்து யூனியன் ஆபீஸ்.

பாத்திரங்கள்: பி. டி. ஓ. சோமு, வேதாசலம் முதலியோர். (பி. டி. ஓ. அமர்ந்திருக்கிருர். சோமு உள்ளே வருகிறுன்)

பி. டி. ஓ. வாங்க மிஸ்டர் சோமு! வாங்க. என்ன விவசாயத்திலே தீவிரமா ஈடுபட்டுட்டீங்க போல இருக்கே இந்த வருஷம் உங்க நிலத்திலே விளேச்சலெல்லாம் நல்லா இருந்ததாக மாணிக்கம் சொன்னுரு.

சோமு: ஆமா சார்! நல்லது மட்டுமில்லே நம்ம ஊரிலேயே இந்தத் தடவை எங்க நிலத்திலே தான் சார் அதிக விளேச்சல்.

பி. டி. ஓ. அப்படியா ரொம்ப சந்தோஷம்......

சோமு: சார் இதுக்கெல்லாம் காரணம் நம்ம ஏ. இ. ஓ. தான் சார். அவர் கொடுத்த விதைகள், அவர் சொன்ன திருந்திய முறைகள், அவர் கொடுத்த பூச்சி மருந்துகள் இதெல்லாம் தான் சார் எங்களுக்கு அதிக விளேச்சலேத் தேடி தந்துச்சு.

பி. டி. ஓ. மிஸ்டர் சோமு, நீங்க உணர்ந்திருக்கிற மாதிரி அரசாங்க அதிகாரிகளுடைய சேவையை எல்லா விவசாயிகளும் உணரனும். அவங்களுக்கு அறிவுக் கண் திறக்கனும் என்பதற்காகத்தான் நாங்கள் எல்லோரும் பாடுபடுகிறேம். தவிர வெறும் பேரும் புகழும் வேணும் என்பதற்காக அல்ல. இன்னும் உங்களுக்கு சொல்லனும்னு நினேச்சேன். பாருங்க மிஸ்டர் சோமு நல்ல விவசாயம் செஞ்சதுனலே உங்களுக்கு நல்ல மகசூல் கிடைச்சிருக்கலாம். ஆனல் ஒரு விவசாயி முன்னேறுவதற்கு அதுமட்டும் போதாது. வேறு சில சிறு வேலேகளும் செய்யனும். கொத்திப் பொறுக்கக் கோழியும் குதித்து விளேயாடக் குழந்தையும் இல்லாத வீடு என்ன வீடுன்னு பழமொழி சொல்லுவாங்க. அது ரொம்ப ரொம்ப உண்மை. குழந்தைகளேப் போலவே கோழிகளும் நமக்கு முக்கியந்தான். அதிலேயும் நிறைய லாபம் கிடைக்கிது. கோழிப் பண்ணே வைக்கிறதுக்கு அதிகப் பாடுபட வேண்டியதில்லே. நல்ல ஜாதிக் கோழிகளே வளர்த்திங்கன்ன நல்ல லாபமிருக்கு. இதைத் தவிர ராட்டையிலே நூல் நூக்குறது....இது மாதிரி ஏதாவது குடிசைத் தொழில் கூட செய்யனும். இல்லேன்ன உழவன் கணக்குப் பார்த்தால் உழக்கு கூட மிஞ்சாதுங்கிறது சரியாப் போயிடும்.

சோமு: நல்லாச் சொன்னீங்க....சார் இதைப் பத்தி நானே உங்களேக் கலந்து பேசனும்னு நினேச்சேன். நீங்களே சொல்லிட்டீங்க..சார் இந்த கோழிப் பண்ணே வக்கிறதுக்கு எனக்கு ரொம்ப நாளா ஆசை சார். இந்த வெள்ளே லெக்ஹார்ன், கருப்பு மைனர்கா, ரோட் ஐலண்டு, கோழிகளேக் கொடுத்து உதவி செய்யுங்க சார். நான் நல்லா கவனிச்சிக்கிருவேன்....

பி. டி. ஓ. Yes. நான் E. O., Animal Husbandry யை அனுப்புறேன் அவர் எல்லா ஏற்பாடுகளும் செஞ்சு கொடுப்பாரு.

சோமு: ரொம்ப நன்றி சார். நான் போயிட்டு வர்ரேன் (போகிறுன்).

வேதா: (உள்ளே நுழைந்து) என்ன சார் சோமு எங்கே வந்துட்டுப் போருன்.

பி. டி. ஓ. என்னேப் பார்க்கத்தான் வந்துட்டுப் போருர் சார். சோமு ஒரு நல்ல அறிவாளி மட்டுமல்ல ஒரு நல்ல உழைப்பாளியுங் கூட. குடும்ப முன்னேற்றத்திலே எவ்வளவு அக்கறை இருக்கு பாருங்க சார்..

வேதா: சார் (சிரித்துக் கொண்டு) சோமு மட்டும் அப்படியில்லே சார். அவன் பரம்பரையே நல்ல உழைப்பாளிகள் பரம்பரை. ஏதோ கஷ்ட காலம் கடன் பட்டுப் போனுங்க......

பி. டி. ஓ. சார் அவங்க கஷ்டம் சீக்கிரம் தீர்ந்து போகும் சார்....இப்போ அவங்க எல்லோருமே நல்லா உழைச்சு முன்னுக்கு வந்துகிட்டிருக்காங்க..

வேதா: அதுதான் சார் வேணும். போகட்டும் தாமரைப் பட்டிலே....குடி தண்ணீருக்கு டாங்கு கட்டுனுங்களே..முடிஞ்சு போச்சுன்னு யூனியன் இஞ்சினீர் சொன்னுரு, போய்ப் பார்த்துட்டு வரலாமா..

பி. டி. ஓ. போகலாம் சார்....

(இருவரும் போகின்றனர்)

—திரை—

(தொடரும்)

கந்தகத் தூளும் சோளம் விளைச்சலும்

(பி. எ. மகம்மது இப்ருஹிம், என். மாரியப்பன், எஸ். சீனிவாசன், என். ஷண்முகம்,
மண்டல ஆராய்ச்சி நிலையம், கோவில்பட்டி.)

சோளத்திற்கு கந்தகத்தூள் தூவுவதினால் செந்தாளைப் பூச்சியும், இலைப்புள்ளி நோய்களும் கட்டுப்படுத்தப்பட்டு ஹெக்டேருக்கு சுமார் 300 கிலோ கிராம் தானியம் அதிகமாக விளைகிறது. கோவில்பட்டி மண்டல விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் இது சம்பந்தமாக நடைபெற்ற ஆராய்ச்சி மூலம் இது தெரிய வந்துள்ளது.

சோளத்தில் மூன்று இலைப் புள்ளி நோய்கள் காணப் படுகின்றன. அவை, (1) சிவப்பு இலைப்புள்ளி, (2) இலை கருகல், (3) செம்புள்ளி. இவை முக்கியமாக இறைவைச் சோளத்திற்கு மிகுந்த சேதம் விளைவிக்கிறது ; பத்து முதல் 30 சதவீதம் வரை தானியம் சேதமாகிறது. இந்த நோய்களுக்குத் தடுப்பு முறைகளை ஆராய கோவில்பட்டியில் கடந்த இரண்டு ஆண்டுகளாக பரிசோதனை நடைபெற்றது.

கே. 2 என்ற இறைவை வெள்ளைசோளப் பயிருக்கு இலைப்புள்ளி நோய் தடுப்பிற்காக டைத்தேன், கந்தகக் கரைசல், கந்தகத் தூள் ஆகிய பூசண நாசினிகளை உபயோகித்து பரிசோதிக்கப்பட்டது. இவைகளை 15 நாட்களுக்கொரு தடவையும், மாதத்திற்கொரு தடவையும் உபயோகித்ததில் மாதந்தோறும் கந்தகத் தூள் தூவுவதே சிறந்ததாகக் காணப்பட்டது.

மாதம் ஒருமுறை மருந்தடிக்கப்பட்ட பயிர்களின் விளைச்சல்.

		1962–63.	1963–64.
		கி-கி. /ஹெக்டேர்	
1.	டைத்தேன் தெளித்தல்	2145	3075
2.	கந்தகம் கரைசல் தெளித்தல்	2414	2958
3.	கந்தகத்தூள் தூவுதல்	2540	3142
4.	மருந்தடிக்காத பயிர்	2242	2842

கந்தகத் தூள் தூவுவதினால் ஹெக்டேருக்கு சுமார் 300 கிலோ கிராம் தானியம் அதிகமாக விளைந்தது. இதனால் இலைப்புள்ளி நோய்கள் கட்டுப்படுத்தப்பட்டதோடு, சோளத்தில் சாதாரணமாகத் தோன்றும் செந்தாளைப் பூச்சியும் (மைட்) தடுக்கப்பட்டது. செந்தாளைப் பூச்சி விளைவை மிகவும் பாதிக்கக்கூடும். மாதம் ஒரு தடவை கந்தகத் தூள் தூவுவதினால் செலவும் குறைவு; தூவுவதும் மிகவும் சுலபம். ஹெக்டேருக்கு 50 ராத்தல் வீதம் மூன்று தடவை தூவுவதால் கூலி உட்பட ரூபாய் 35 தான் செலவாகும். செலவு போக ரூ. 145 மதிப்புள்ள தானியம் கிடைக்கிறது. ஹெக்டேருக்கு 750 கிலோ கிராம் தட்டையம் அதிகமாகக் கிடைக்கிறது. தட்டையின் விலை ரூ. 15-ம் சேர்த்து ஹெக்டேருக்கு ரூ. 160 அதிக லாபம் கிடைக்கிறது.

எனவே விவசாயிகள் அனைவரும் பலன் நிறைந்த இந்த எளிமையான முறையைப் பின்பற்றி உணவு தானிய உற்பத்தியை அதிகரிக்கும்படி கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

மெட்ரிக் முறை எடைகளும் அளவுகளும் மட்டுமே சட்டப்படி அமுலிலிருக்கும் எடை அளவுகளாகும்.
கெஜம் அளவில் துணிகள் கேட்காதீர்கள்.

துணிகள் வாங்கும்போது

மீட்டர்

அளவில் மட்டுமே வாங்குங்கள்

DA 63/442

நீலகிரியில் மண் வளப் பாதுகாப்பு திட்டச் சாதனைகள்

நீலகிரி மாவட்டத்தில் வருடா வருடம் பயிரிடும் நிலங்கள் மண் அரிப்பால் பதிக்கப்பட்டு, குறைந்து கொண்டே வருகிறது. ஊட்டி ஏரியும் வெகுவாக தூர்ந்து போயிருக்கிறது. மின்சார உற்பத்திக்காக கட்டப்பட்ட காட்டேரி ஏரியும், தூர்ந்து போய், மின்சார உற்பத்தியே தடைபட்டிருக்கிறது.

இப்பெரும் சேதத்தைத் தடுத்து, மண்வளம், மலை வளம், நீர்வளம் பாதுகாக்கவே நீலகிரி மாவட்டத்தில் முதன்மையாக 1951-ம் ஆண்டிலிருந்து கீழ்க்கண்ட மண்ணரிப்புத் தடுப்பு முறைகள் கையாளப்பட்டன. உருளைக்கிழங்கு, தானியப் பயிர்களுக்கு சரிவுக்குக் குறுக்கே படிமட்டங்கள் அமைத்தலும், தோட்டப் பயிர்களுக்கு சமதள வாய்க்கால் அமைத்தலும் இங்கு மேற்கொள்ளப்பட்ட மண்ணரிப்புத் தடுப்பு வேலைகள். 1963–64-ம் ஆண்டு முடிய 13,600 ஏக்கர்களில் மண் அரிப்புத் தடுப்பு முறைகள் கையாளப்பட்டிருக்கின்றன.

மாநில புள்ளி விவர நெறியாளரால் நீலகிரி மாவட்டத்தில் மண்வளப் பாதுகாப்பு முறைகள் மேற்கொள்ளப்பட்ட நிலங்களில் உருளைக்கிழங்குப் பயிரின் விளைச்சல் பற்றிய பரிசோதனைகள் நடத்தப்பட்டன. படிமட்டங்கள் அமைத்த நிலங்களில், அமைக்கப்படாத நிலங்களைவிட 18 முதல் 34 சதவீதம் அதிக உருளைக்கிழங்கு விளைச்சல் கிடைத்தது.

படிமட்டங்கள் அமைக்க ஏக்கருக்கு ரூ. 450-ம், வாய்க்கால்கள் அமைக்க ரூ. 100 மட்டுமே செலவாகிறது. தாங்களே மண் அரிப்புத் தடுப்பு வேலைகளைச் செய்ய இயலாத விவசாயிகளுக்கு அரசாங்கமே இவ்வேலைகளை மேற்கொண்டு, அதற்காகும் செலவைக் கடனாகக் கொடுக்கிறது. அக்கடனிலும் 50 சதவீதம் மட்டுமே, 20 வருடாந்திர தவணைகளில் திரும்ப வசூலிக்கப்படுகிறது. மறுபாதியை அரசாங்கம் மானியமாக விவசாயிகளுக்கு அளித்துவிடுகிறது.

"வளத்தைப் பெருக்க நிலத்தை மண்ணரிப்பினின்று பாதுகாருங்கள்."

உரம் ஏற்றி உணவைப் பெருக்குவோம்

(தி. சி. சுந்தரம், கம்போஸ்ட் டெவலப்மெண்ட் இன்ஸ்பெக்டர், சங்ககிரி வட்டாரம், சேலம் மாவட்டம்.)

சங்ககிரி வட்டாரத்தில் இவ்வருடம் ஜூலை மாதம் கம்போஸ்ட் வார விழா வெகு விமரிசையாக நடந்தேறியது. காவேரிப்பட்டி அக்ரஹாரம் பஞ்சாயத்தில் 10 புதிய கம்போஸ்ட் குழிகள் 15′×8′×3′ அளவில் வெட்டப்பட்டு தகுந்த முறையில் பொது மக்களாலும் பஞ்சாயத்தார்களாலும் 60 டன் கம்போஸ்ட் உரம் தயார் செய்யப்பட்டது. இதன் மூலம் பஞ்சாயத்துக்கு அரசாங்க மானியமாக ரூ. 40 வருமானம் தேடப்பட்டது. கம்போஸ்ட் வார விழாவன்று நடந்த பொதுக்கூட்டத்தில் "கம்போஸ்ட் உரமும் அதன் முக்கியத்துவம்" என்பது பற்றி வட்டார வளர்ச்சி அதிகாரி திரு. ஆர். கஸ்பார் அமல்தாஸ், திரு. ஆர். சின்னராசு, விவசாய விஸ்தரிப்பு அலுவலர், திரு. தி. சி. சுந்தரம், கம்போஸ்ட் இன்ஸ்பெக்டர், மற்றும் திரு. காந்தி, கிராமநல ஊழியர் முதலானவர்கள் எடுத்துரைத்தனர். பிறகு பொது மக்கள் நன்றி கூற விழா இனிது முடிவடைந்தது.

தக்காளி விதைக்குத் தர நிர்ணய வெளியீடு

இந்தியத் தர நிர்ணயக் கழகம் தக்காளி விதைகளுக்கான தர நிர்ணயங்களை முடிவு செய்து ஆங்கிலத்தில் வெளியிட்டுள்ளது. இந்த நிர்ணயங்கள் அடங்கிய ஆங்கிலப் பதிப்பு ஒன்றின் விலை ரூ. 1–50. இப்பதிப்புகளை, "இந்தியத் தர நிர்ணயக் கிளை குழு அலுவலகம், 54, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை–2" என்ற விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

சிறந்த மகசூலுக்கு உயர்ந்த விதைகள் எளிதில் கிடைக்கவேண்டும். இவ்வகையில் உதவி செய்வதன் பொருட்டு இந்திய தர நிர்ணயக்குழு பீட்ரூட், வெண்டை, பீன்ஸ், பட்டாணி, முட்டைக் கோஸ், பூக்கோசு, டர்னிப், காரட், கத்தரி, முள்ளங்கி போன்ற பலவகைக் காய்கறி விதைகளின் தர நிர்ணயங்களை முடிவு செய்யவிருக்கிறது. இன்னும் பல வகை விதைகளை மாதிரி எடுக்கும் முறை, பரிசோதிக்கும் முறை முதலியவைகளுக்கான நிர்ணயங்களும் தொகுக்கப்பட்டு வருகின்றன.

உர விழா—பூவிருந்தவல்லி

1964-ம் வருடம் அக்டோபர் 2-ம் தேதி காந்தியடிகளின் பிறந்த நாளன்று பூவிருந்தவல்லி வட்டாரத்தைச் சேர்ந்த கொட்டாமேடு கிராமத்தில் உர விழா கொண்டாடப்பட்டது. விழாவையொட்டி ஒரு விவசாய, கால்நடை பொருட்காட்சி வைக்கப்பட்டிருந்தது. தமிழ்நாடு மாநில முதலமைச்சர் திரு எம். பக்தவத்சலம், விழாவைத் துவக்கி வைத்தார். செங்கல்பட்டு மாவட்ட கலெக்டர், விவசாயக் கூட்டு நெறியாளர், பஞ்சாயத்துத் தலைவர், விழாவிற்கென வந்திருந்த பாத யாத்ரிகர்களும் முதலமைச்சரை கிராமத்திற்குள் வரவேற்றனர். முதலமைச்சரின் 68 வயது நிறைவை முன்னிட்டு இரசாயன உரம் கொண்ட 68 வண்டிகள் முன்னே செல்ல அனைவரும் ஊர்வலமாகச் சென்று விழாவுக்கென அமைக்கப்பட்ட அழகிய பந்தலுக்கு முதலமைச்சரை அழைத்துச் சென்றனர். இறை வணக்கத்துக்குப் பின் பூவிருந்தவல்லி பஞ்சாயத்து யூனியன் தலைவர், திரு டி. எஸ். கே. சாரி அனைவரையும் வரவேற்றார். மாவட்டக் கலெக்டர் விழாவுக்குத் தலைமை தாங்கினார். தலைவர் முன்னுரையில், தற்பொழுது விவசாயிகளுக்குப் போதிய அளவு அமோனியம் சல்பேட் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் அவர்கள் இரசாயன உரத்தை அதிக அளவில் உபயோகிக்க வேண்டும் என்றும் கூறி, முதலமைச்சரை உர விழாவைத் துவக்கி வைத்தும் புதிய பள்ளிக் கட்டிடம் ஒன்றையும் திறந்து வைக்குமாறு கேட்டுக்கொண்டார். முதலமைச்சர் விழாவைத் துவக்கி வைத்துப் பேசுகையில், கிராமவாசிகளின் அடிப்படைத் தொழில் விவசாயமும் கால்நடையுமாகும்; விவசாய உற்பத்திக்குத் தழை, கம்போஸ்ட், ஆட்டு உரம் இவைகளை உபயோகித்தாலும் அதிக உற்பத்திக்கு இரசாயன உரம் மிக அவசியம்; மேல்நாடுகளில் அதிக உற்பத்திக்கு நிறைய இரசாயன உரம் உபயோகிக்கின்றனர் என்று கூறினார். கிராம மக்கள் முன்னேற்றத்தின்பொருட்டு பஞ்சாயத்துக்கள் அமைத்து அவைகளுக்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. கிராமங்களில் செல்வ நிலை பெருகி மக்கள் தம் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அளவுக்கு வருமானம் பெருக வேண்டும்; இவ்வழியில் மக்கள் பஞ்சாயத்துகளின் உதவியோடும் நன் முயற்சியோடும் விவசாயத்தில் ஈடுபட்டால் நமக்குப் பொருளாதாரத் துறையில் வெற்றி கிடைப்பது நிச்சயம் என்று மேலும் எடுத்துரைத்தார். அடுத்து உரையாற்றிய விவசாயக் கூட்டு நெறியாளர், பூவிருந்தவல்லி விவசாயிகள் அதிக அளவு இரசாயன உரம் உபயோகிக்கின்றனர்; ஆனால் மண் பரிசோதனை செய்து சிக்கன முறையில் அதிக வருவாய் தரும் விதத்தில் போதிய உரமிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

பூவிருந்தவல்லி வட்டார பயிர் விளைச்சல் போட்டியில் பரிசு பெற்றவர்களுக்கு முதலமைச்சர் பரிசுகள் வழங்கினார். ஏக்கருக்கு 1955 கிலோ நெல் விளைவித்து வட்டார முதற் பரிசு பெற்ற எம். சௌந்தரராஜய்யங்காருக்கு (பூவிருந்தவல்லி) தங்கப் பதக்கம் வழங்கப்பட்டது. முதலமைச்சரின் 68-வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு, 68 கலப்பைகள், 68 வண்டி இரசாயன உரம், 68 ஜாதிக் கோழிகள் முதலியவை முதலமைச்சரால் வட்டார விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. பஞ்சாயத்து ஆணையாளர் நன்றி கூற விழா இனிது முடிவடைந்தது.



தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம். பக்தவத்சலம் உர விழாவைத் துவக்கி வைத்துப் பேசுதல்.

Registered
No. M-4646

©
தமிழ்நாடு அரசாங்கம்
1964



பயிர் வ்ளைச்சல் போட்டியில் 1955 கிலோ நெல் விளைவித்து முதற் பரிசு பெற்ற
திரு. எம். சௌந்தரராஜய்யங்காருக்கு (பூவிருந்தவல்லி) முதலமைச்சர் தங்கப் பதக்கம் வழங்குதல்.

விவசாயக் கூட்டு நெறியாளர் திரு. கே. சந்தானம், B.SC. (AG) உரையாற்றுதல்.

தமிழ்நாடு அரசாங்க அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு விவசாயச்செய்தி அலுவலரால் தொகுக்கப்பட்டு,
விவசாயத்துறை நெறியாளரால் வெளியிடப்பட்டது.